ரிஜிஸ். ர் நெ. 2044

தனிப் பிரதி விலை | வெளி நாடு 0-1-0
உள் நாடு 0-1-0

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — | ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, | — | ,, 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | — | ,, 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில ௵ மாசி ௴ 12௳ (23—2—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 39

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர்யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.]

உலகப் பிரசித்தி பெற்ற

## மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, தேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபாரிசு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ டின் ரூ. 2—2—0

## சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

## மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ,**
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

## நோட்டீஸ்.

மதுரை முனிசிபாலிட்டியைச் சேர்ந்த டோல் கேட்டுகளில் பீஸ் வசூல் செய்யும் பாத்தியதையையும், மற்றும் இதர குத்தகைகளையும், 1930 ௵ பிப்ரவரி மீ 24 உ திங்கட் கிழமை காலை 9மணிக்கு முனிசிபல் ஆபீசில் பகிரங்கமாய் ஏலம் விடப்படும்.

முனிசிபல் ஆபீஸ் மதுரை 3-2-30 } R. S. நாயுடு சேர்மன்.


## முன்னேற்றம்.

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி

இதன் சந்தா ரூ. 4—0—0 அல்லது ஷி. 2—25

விலாசம்:— மானேஜர்,

"முன்னேற்றம்"

[எப்] 155, சிலிசிரோட், சிங்கப்பூர்.


## மதுரை முனிசிபாலிட்டி டெண்டர் நோட்டீஸ்.

இந்த முனிசிபாலிட்டிக்குவிறகுசப்ளை செய்வதற்கு சீல போட்ட டெண்டர்கள் தேவை. அந்த விறகு ரயில்வே, வேபிரிட்ஜுக்கு 3,மைல் தூரத்திலுள்ளகொச்சடை தண்ணீர் சப்ளை பம்பிங் ஸ்டேஷனில் ஒரு பாகமும், ஒரு மைல் தூரத்திலுள்ள அரப்பாளையம் தண்ணீர் சப்ளை பம்பிங்ஸ்டேஷனில் ஒரு பாகமுமாக வாடகை யின்றி கொண்டுவந்துபோடவேண்டும்.

2. விறகுகள் நன்ருய்க் காய்ந்ததாயும், சேகேரியதாயும், இரண்டரை அங்குல குறுக்களவிற்குகுறையாததாயும், ஆறு அங்குலத்திற்கு அதிகப்படாததாயும், இரண்டு அடி நீளமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

3. இதற்கு வேறுபட்ட அளவுள்ளதும் கணுவுள்ள மாமும் கண்டிப்பாய் தள்ளுபடி செய்யப்படும்.

4. 1930—31 அபிஷியல் வருஷத்திற்கு வேண்டிய விறகு அளவு கொச்சடை ஸ்டேஷனுக்கு 400- டன் என்றும், அரப்பாளையம் ஸ்டேஷனுக்கு 200டன் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தப்படி சப்ளை செய்வதில் அப்போதைக்கப்போது கொடுக்கப்படுகிற உத்திரவுப்படிகொஞ்சங் கொஞ்சமாய் சப்ளை செய்யவேண்டும்,

5. டெண்டர்தார், டெண்டரின்மேல் "1930—31 ௵த்துக்கு விறகு சப்ளை செய்ய டெண்டர்"என்று தெளிவாய் எழுதி ரூ. 100 டிபாசிட் தொகையுடன்1930-௵ பிப்ரவரி-மீ 25-உ மாலை 5 மணிக்குள், கீழ் கையொப்பமிட்ட எனக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். டெண்டர்தாருக்கு முனிசிபாலிட்டியினால் எவ்வளவு தொகை கொடுக்கப்படவேண்டியிருந்தாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும்அதை டிபாசிட்டுக்காக உபயோகித்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது, டெண்டர்கள் பைசல் செய்யப்பட்ட ஒரு வார வாய்தாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டர்தார் மறுபடியும் ரூ,200 டிபாசிட்டு கட்டுவதோடு, தனனுடைய சிலவில் ஒரு ஒப்பந்தப் பத்திரமும் எழுதிக் கொடுக்கவேண்டும். அப் பத்திரத்தின் நகல் ஆபீசில் கிடைக்கும். அந்தப்படி செய்யத் தவறினால்ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதோடு டிபாசிட் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

6. எல்லா டெண்டர்களையுமோ, அல்லது சிலவற்றையோ, யாதொரு காரணமும் காட்டாதுதள்ளிவிடுவதற்கு இந்த சபைக்கு பூரண அதிகாரம் உண்டு, எற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் விறகு சப்ளை செய்வதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட ரசீது யெல்லாம் தனிக்கை செய்யப்பட்ட பிறகே டிபாசிட் தொகை வாப்பீஸ் செய்யப்படும்,

முனிசிபல் ஆபீஸ் 28-1-30 மதுரை. } ஆர். எஸ். நாயுடு, சேர்மென்.

## பாபநாசம் தாலூகா போர்டு

இத்தாலூகா போர்டின் பாபநாசம் சர்க்கிள் வரப்போகும் எலக்ஷனில் ஒரு அபேட்சகராக அய்யம்பேட்டை வியாபாரியும் யூனியன் போர்டு மெம்பருமான டி. ஆர். அப்துல் ஜாப்பார் சாகிப் நிற்கிறார். ஒரு நிருபர்

## சௌராஷ்டிர உயர்தர கலாசாலை பழைய மாணவர் சங்கம், மதுரை.

இச் சங்கத்தின் இலவச வாசகசாலை (Library and Reeding Room) தற்சமயம் இருந்து வரும் தெற்கு மாசி வீதி 124 நிர். மேல் மாடியிலிருந்து, நாளது ௵ தை மீ 27 உ )9—2—30) ஞாயிற்றுக் கிழமை முதல், கீழவெளி வீதியிலிருக்கும் டோர் 85 நிர். வீட்டு மேல் மாடியில் மாற்றப்பட்டிருக்கிறதை அங்கத்தினர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

| | |
|---|---|
| எ. ஆர். ராகவன் வாசகசாலை டைரெக்டர். | எம். கே. சுந்திரராமய்யர், என். எஸ். இராமராமய்யர், காரியதரிசிகள். |


## கவலை என்?

பணமா, அப்படியானல், சொற்ப வரும்படியுள்ள வியாபாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் முதலான பேர்களுக்கு எந்த மாதத்தில் பண அவசர மேற்படுகிறதோ அதேமாதத்தில் தூரமான இடங்களிலிருந்தே ரூ. 5000, ஐயாயிரமுள்ள பிரதிமாத ஏலத்தில் டெண்டர் ஏலம் தபால் மூலமாய் கேட்கும் விதமுள்ள நிபந்தனைகளடங்கிய புஸ்தகத்துக்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதினால் அனுப்பப்படும். ஏஜென்டுகளும் தேவை. மானேஜர்,

தனலக்ஷிமி கம்பெனி.
திருநெல்வேலி.
Tinnevelly (S India)

## WANTED.

Candidates for Telegraph and Station Master's Classes

Full particulars and Railway Fare Certificate on 2 annas stamp.

Apply to.—
Imperial Telegraph
College, Nai Sarak, Delhi 6

குணம் இல்லையாயின் பணம் வாபீஸ்

தேகாரோக்கியம்.

## வைரத்திற்கு மேலானது!

## நாராயண சஞ்சீவி லேகியமும்

அயத்தங்க செந்தூரமும்

இரத்தத்தை சுத்தி செய்து, நரம்புகளை முறுக்கேற்றி, தேக அழலையைப் போக்கி, சீதோஷ்ணத்தை சமனப்படுத்தி, ஆரோக்கியத்தையும் தாது விர்த்தியையும் உண்டாக்கி, சிற்றின்பத்தில் மிக மகிழ்ச்சியைத் தரும். துர் அப்பியாசத்தினல் உண்டாகும் பலஹீனத்தைப்போக்கி அபாரமான ஞாபக சக்தியை உண்டாக்கும். 20-வகை மேகரோகங்களையும் போக்கடிக்கும்.

24-நாள் லேகியமும் அயத்தங்க செந்தூரம் புட்டி 1-ம் ரூ. 2—4—0
48-நாள் " " " " 2.ம் ரூ. 4—4—0

நாராயண சஞ்சீவித் தைலம்,—பச்சிலை மூலிகைகளாலும் பசும் பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டன. தேக வரட்சியைப் போக்கி, மூளையைக் குளிரச் செய்து புத்திக் கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருட காலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய்வாங்கிஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தைதோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1—0—0

நாராயண திராட்சைப் பழ லேகியம்:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனல் நமது நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதை சரியாய் கவனிக்காமையினால் அநேக வித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கேச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாயிருக்கும்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1—0—0

எல்லாவற்றிற்கும் தபால் செலவு வேறு. வெளிநாட்டன்பர்கள் தபால் செலவு சேர்த்து முன்பணமாக அனுப்பவேண்டும்.

ஸ்ரீ நாராயண மேடிகல் ஹால், காஞ்சீபுரம்.

## இந்த சமாதானத்தையும் படித்துப் பாருங்கள்.

கைவல்யம்.

ஒரு பெரு சமயமென்னும் சைவ சமயத்திற்கு தலைமை வகிப்பவர்கள் அச்சமயத்தின் உண்மை தத்துவங்களை விரிந்த அறிவால் விளக்கிக் காட்டவேண்டுமேயல்லாமல் கோபமூண்டு நரம்புகளைக் கோரமாய் முறுக்கிப்பின்னிக்கொண்டு விபரமற்ற வார்த்தைகளால் சமயப்பெருமைகளை விளக்கிவிட்டதாக நினைத்தால் அதனால் சைவ சமயத்தின் உண்மை தத்துவம் விளங்காது என்பதை முன் வியாசத்தில் எடுத்துக்காட்டினேன்.

அவ்வார்த்தைகள் சமயவாதிகளின் மூளையைச் சம்மந்தித்த ஒருவித வியாதியேயாம். இம்மதாவேசத்தால் கட்டுப்பட்டவர்கள் மனிதர்க்குள் மிக்க பக்தி சிறத்தையுடையவர்களானலும் அவர்கள் உலகத்திலுள்ள ஏனைய உன்மத்தர்களைப்போலவே தாங்கள் செய்யும் செயலகளுக்கு உத்தரவாதமற்றவர்களாக விருக்கின்றனர்.

வியாதிகளுக்குள்ளே மதாவேசம் என்னும் வியாதியானது மிகவும் அபாயகரமானது. மானுட வியற்கையிற் குடிகொண்டிருக்கும் சர்வவித துஷ்டத்தனமும் இவ்வொன்றினாலேயே வெளிக்கிளம்பி சனசமூகத்தில் கொடுமைகள் விளைவிப்பதற்கு ஏதுவாயிருக்கின்றது. எவ்வளவு சமய சாஸ்திரங்களைப் படித்தவர்களுக்கும் ஆசாரங்களை அனுஷ்டித்தவர்களுக்குங்கூட ஒவ்வொரு ஆத்மாவும் தெய்வத்தன்மையை அவ்யக்த வடிவமாய் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது என்னும் நினைவே வராமல் வெளிப்புறத்திலும் உள்புறத்திலுமுள்ள பிரகிருதியை அடக்கி ஆத்மாவின் அந்தத்தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே வாழ்க்கையின் பயனும் சைவ சமயத்தின் கட்டளையுமாம் எனபதையும் மறந்தே விட்டார்கள்.

திருஞான சம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றினர் என்று வந்த விவகாரங்களை முன்னமே விவகரித்திருக்கிறது. மதுரை நாடார் மகாநாட்டிலும் திருநெல்வேலி சைவ மகாநாட்டிலும் அதைக் கிளப்பின 'திரு. கலியாணசுந்தர முதலியாருக்கும் அதற்கு வியாக்யானம் சொல்லவந்த சைவப் பண்டிதர்கட்கும் பல சமாதானங்கள்எழுதியுமாய் விட்டது. அதோடு அதைநாங்களும் விட்டுவிட்டோம். இப்பொழுது புதுச்சைவ தலைவருமல் "பால் மணம்மாறாதஎங்கள் ஞானச்சேயைப் புலால் மணம் மாறாத ஈனப் பேய்களே கொலைபாதகர்" என்றும் "பாத்தையரைப்புணரும்பாமரர்களே எங்கள் பரவை மணாளனைக்குறைகூறும்" என்றும் "எங்கள்மணிவாசகனை குளிய திருவாசகம் ஒரு வாசகத்திற்கும் உருகாத மனப்பாறைநட்கேறுமோ" என்றும் தூத்துக்குடி சைவச் சபையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனல் "குடி அரசு" அதற்கு பதில் சொல்லித் தீரவேண்டியுமிருக்கிறது. பக்தி யொன்றிலேலே ஒரு பக்ஷமாய் நிற்பவர்கள் அவற்றைப் பொதுப்படுத்திப்பார்க்கட்டும்.

உண்மை உபதேசத்தின் முதலிலக்கணம் என்னவெனில் அது யுக்திக்கு மாறாய் இருக்கப்படாது. யுக்தியறிவே வளர்ந்து அருள்வாக்காகின்றமையால் அருள் வாக்கானது யுக்திக்கு மாறுபட்டு நிற்காது. யுக்தி அறிவினல் தெரியப்படாதவை அருள் அறிவால் விளக்கப்படும் என்று சொன்னலும் அவை யுக்தி அறிவிற்கு எதிர் மறையாகாது. இயற்கை அறிவு, யுக்தி அறிவு, அருள் என்பவை மூன்றும் அறிவின் கருவிகள். தாழ்ந்த அறிவுக்கருவியை உயர்ந்த அறிவுக்கருவியென மயங்குவதால் நமது சாஸ்திரங்களில் சண்டையும் சமய வேறுபாடுகளும் நிறைந்து விட்டன. இயற்கை அறிவே அருள் வாக்கென்று பல தடவையும் முன் வந்து நிற்கின்றபடியால் பலபேரும் தங்களுக்கு ஞானதிருஷ்டியுண்டாய் விட்டதென்று பொய் வேஷம் பூண்டதாலும் தன் மூளையிலுண்டாகும் கலக்கத்தை அருள் ஞானோதயமென்றெண்ணித் தன்னைச் சூழ்ந்திருக்க சிஷியர்கள் வேண்டுமென்றூர்கள். இப்பொழுது நமது மதத்தலைவர்களான ஆசாரிகள், ஜீயர்கள், மடாதிபதிகள், மகுந்துக்கள், புரோகிதர்கள் முதலியவர்கள் இருக்கப்பட்ட பூர்வஸ்தானம் பரிசுத்தமாக விருந்தாலும் அத்தஸ்தானத்தில் இப்பொழுதிருக்கப்பட்டவர்களுக்கு யுக்தி அறிவுகூட இல்லாமல் இயற்கை அறிவிலிருந்து கொண்டு அவர்களின் அறிவை அருள்வாக்கென்றே மதிக்கப்பட்டு வருவதையும் அவர்களைச் சேர்ந்தவர்கள் அதை விசேடப்படுத்திச் சொல்லுவதையும் நாம் பிரத்தியக்ஷமாகப் பாக்கிறோம்.

மேனுட்டில் இயந்திர மனிதன்பேசுவதும் ஒருவன் ஒருஇடத்திலிருந்து பேசினல் அவன் பேச்சு உலகத்திலுள்ளவர்கள் காதிலெல்லாம கேட்பதும்ஒருமணிக்கு 360 மைல் ஆகாயத்தில் பறப்பதும் கண்டு பிடித்தவர்களையும் இன்னும் பல அற்புதங்களை கண்டுபிடித்த எடிசன் முதலிய சாஸ்திர அறிஞர்களையும் அங்கு அருள் வாக்குடையவர்களென்று சொல்வதில்லையே.யுக்தியின் அறிவில் சிறந்தவர்களென்றே சொல்லுகிறார்கள். யுக்தி அறிவு தெய்வத்தன்மையில் கலந்து பூரணமடைகிறவரையிலும் யுக்தி அறிவால் இன்னும் அநேக விஷயங்களைக்கண்டு பிடிக்கவும் அவர்களுக்கு உபயோகபபடுகிறது. நமது நாட்டில் சிறிது விசேட யுக்தியோடு இலக்கியக்கோர்வையாக ஒரு புராணம் பாடிவிட்டாலும் சொன்னவர்கட்கும்படிப்பவர்கட்கும் அர்த்தமாகபததும்அர்த்தம் காணமுடியாததுமான வேதாந்த பதங்களினல் சில பாட்டுகள் பாடி விட்டாலும் சமய ஆசாரங்களில் சிலதை அனுஷ்டித்தாலும் சத்தியமான ஒழுக்கங்களில் முக்கியமானதைத்தள்ளி சமய ஒழுக்கங்களில் சிலதில் பற்றுதல் கொண்டிருந்தாலும் அவர்களெல்லாம் அருள் பெற்றவர்கள் என்றே நமது நாட்டில் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அதனல் நமக்கு யுக்தி யறிவும் விர்த்தியடையாமல் அருளும் வந்து சேராமல் இயற்கை யறிவே எதற்கும் முன் நிற்பதால் நாம் லௌகீகத்திலும் வைதீகத்திலும் விர்த்தியடையவில்லை.

நமது சக்கரவர்த்தி அவர்கள் ரெத்தத்தின் ஒரு பாகத்தில் விஷம் வியாபித்து வியாதி யடைந்து இறந்து போவார் என்று நினைத்த காலத்தில் விடத்தை மருபாகம் செல்ல விடாமல் மருந்தாலும் ஆயுதத்தாலும் தடுத்து இரண்டுதரம்குணப்படுத்தினவைத்தியர்களையும், காலம் சென்ற நமது எட்வர்ட்டுச் சக்கரவர்தியின் வயிற்றிலிருந்த கட்டியின் மூப்பின் பக்குவமறிந்து வயிற்றைக் கிழித்துக் குணப்படுத்தின வைத்தியர்களையும், நமது விக்டோரியா மருமகனுன ஜர்மன் சக்கரவர்த்தியின் தொண்டைப்புத்தை அறுத்து தொண்டைக்குள் வெள்ளிக்குழாய் வைத்து சௌக்கியப்படுத்தின வைத்தியர்களையும் அந்நாட்டில் அறிவுடையவர்களென்று சொல்லுகிறார்களேயல்லாமல் அந்த தேசத்தின் தெய்வத்தின் அம்மன் திரு ஞானப்பால் கொடுத்ததாகச் சொல்லுவதில்லையே நமது நாட்டின் ஒருசிறு ராஜாவின் ஜுரம் தீர்ப்பதற்கு தேவியின் ஞானப்பாலுண்டவர்களே வேண்டியிருக்கிறது. தீர்ப்பவர்களை கடவுள் ஞானப்பாலுண்டவர்களென்று சொல்லுகிறோம். பாண்டிய ராஜ வம்சமே இப்பொழுதில்லை. திரு ஞான சம்பந்தர் ஒருவர் தவிர சைவத்தில் கடவுள் தேவியின் ஞானப்பாலுண்டவர்களில்லை. பாண்டிய ராஜ வம்சங்களுக்கு வந்த வியாதிகளைத்தீர்ப்பதற்கு திருஞானசம்பந்தரைப் போல்அளிவில்லாததினல்தான்பாண்டிய ராஜாக்களின் வம்சமே அழிந்து போயிற்று? சைன்யத்திற்கு அந்தக்காலத்தில் குதிரைகளே முக்கியம். குதிரைகள் வாங்கவேண்டிய பணத்திற்கு மந்திரியான மாணிக்க வாசகர் கோவில் கட்டிவிட்டபடியால் சைன்னியத்திற்குத் தக்க பெலமில்லாமல் தெலுங்கரும் துலுக்கரும் எடுத்த படையெடுப்பில் அந்த ராஜ வம்சம் அழிந்துபோயிற்று என்பதை கவனித்தால் அவரவர்கள் கடமைகளை விட்டு தெய்வத்தின் பேரில் ஏற்றி வைக்கப்பட்ட சுமையே நமது நாட்டின் எல்லா அழிவிற்கும் காரணம் என்பது விளங்கும்.

திருஞானசம்பத்தர் சமண மதத்தை சைவ மதத்தால் ஞானப்பாலுண்ட மருத்துவத்தில் வென்று சமணர்களைக் கழுவில் போட்டதும் மாணிக்கவாசகர் குதிரை வாங்கவேண்டிய பணத்திற்கு கோவில் கட்டி அதற்காக கடவுள் நரியைப் பரியாக்கியும், பரியை நரியாக்கியும் செய்த திருவிளையாடல்களைப் போன்றவைகளை ஆலோசித்தால் இவ்வுலகத்திலே உபதேசிக்கப்பட்ட எதிரிடையானதும் யுக்திக்கு ஒவ்வாததுமான ஆபாசக் கொள்கைகளெல்லாம் அருள் வாக்கு யெற்றவர்களென்றும் பெருமையடைய முயன்றவர்களின் மூளைக் கலக்கத்தாலுண்டான குளறுகளாகவோ அல்லது தங்கள் மதத்தின் பெருமைக்கு ஏற்படுத்திக்கொண்ட கற்பனைகளாகவோஇருக்குமேயன்றிவேறில்லை.மதுரைஜனங்கள் பேரில் அன்பு கொண்டு சிவபெருமான் வைகையைப் பெருக்கெடுக்கச் செய்தும் அது மதுரை ஜனங்களுக்கு நன்மையை உண்டுபண்ணவில்லை. மதுரைக்கு வாய்க்கால் வெட்டி பெரிய ஆற்றைப் பிரவாகப் படுத்தி ஜனங்களுக்குநஞ்சைபூமியைஉண்டுபண்ணின இஞ்சினீர் கோவிலும் கட்டவில்லை ஞானப்பாலும் குடிக்கவில்லை.

"பால் மணம் மாறாத எங்கள் ஞானச்சேயைப் புலால் மணம் மாறாத ஈனப் பேய்களே கொலை பாதகரென்பார்கள்" என்பதற்குப் பதிலைக் கவனிம்போம். திரு ஞானசம்பந்தரை அவர் சரித்திரத்தால் தெரிகிறோம். அவருக்கு மூன்று வயதில் அம்மனுல் ஞானப்பால் கொடுக்கப்பட்டு அப்பால் குடித்ததின் சின்னங்கள் தெரிய அதைக்கண்டு தந்தை திரு ஞானசம்பந்தரைக் கேட்க அவர் இகாயத்தைக்காட்ட அதில் ரிடபவாகனத்தோடு அம்மன் சமேதராய் சிவபெருமான் தோன்றினர் என்பது அவர் சரித்திரத்தில் இருப்பதைக் கொண்டு பால் மணம் மாராத எங்கள் ஞானசேய் என்று சொல்ல ஏற்பட்டச் சரித்திரத்தில் தானே சமணர்களை கழுவில் போட்டதும் இருக்கிறது.அதில் பிந்தியபாகத்தை மறுத்தால் அவருடைய ஜீவிய சரித்திரத்தை ஆதாரமாகக்கொண்டு விளங்கும் திருஞானசம்பந்தருடைய பண்டை காலத்து சரித்திரங்களில் ஒரு பாகம் துர்ப்பலப் படுமாகில் அவரைப்பற்றிய மற்றைய பாகங்களும் துர்ப்பலப்படாதோ? அப்பொழுது அம்மகா புருடர் பண்டைக்காலத்தில் இருந்ததைப்பற்றிய சரித்திர பிரமாணம் துர்பலப்படுமேயாகில் அவ்வித பிரமாணத்தை ஆதாரமாகக் கொண்ட சமயக் கோட்பாடுகளெல்லாம் தரைமேல்

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# இது தானா ஆஸ்திகம்?

நாமும் இதுகாறும் ஏமாந்து கொண்டே வந்து விட்டோம். வாய்ப் பந்தலிற் வல்லுணர்களான பாகவதர்களும் பண்டிதர்களும் பாட்டிகதை சொல்லி ஏமாற்றி நமது இரத்தத்தை உரிஞ்சி விட்டார்கள். இந்த அரிய சந்தர்ப்பத்தினூடே விழித்துக்கொண்டவர்சிலர்களுக்கு நாஸ்திகர்கள் என்ற பட்டமும் கொடுத்து விட்டார்கள் இத்தகைய புராணப் புரட்டுகளை கையாண்டு அதனால் வரும் பொருளைக்கொண்டு காலங் கடத்த கும்பகோணம் வேண்டியமட்டும் இடங் கொடுக்கின்றது. இதற்கேற்பவே சிவன் கோவில்களில் 21 ம்விஷ்ணு கோவில்களில் 21ம் ஆக 42 பெருங்கோவில்களும் சில்லரை பிள்ளையார் கோவில்களும் அனுமார் கோவில்களும் அளவிற் கடங்காமல் இருக்கின்றன. இத்தகைய சோம்பேரி மடங்களான கோவில்கள் அனைத்தும் பாகவதர்களுக்கு வசதியாகவே இருக்கின்றது. கதா காலட்சேபம் செய்யுமிடம் கோவில்கள். காலட்சேபத்திற்கு விஜயம் செய்பவர்களிற் பெரும்பாலானோர் பார்ப்பனரல்லாதார். காலட்சேபத்திற்குப் பொருளுதவி செய்பவர்களிற் பெரும்பாலானோர்கள் பார்ப்பனரல்லாதார். இவர்கள் உபயம் செய்வதின் மூலநோக்கம் புராண பிரசங்கத்திற்குப் பொருளுதவி செய்தால் தமக்கு வைகுண்டமோ, கைலாசமோ கிடைக்கும் என்ற குருட்டு எண்ணமே யாகும். ஆனல் கதை சொல்லுங் கூட்டத்தாரோ தமது சமூக முன்னேற்றத்தையும் சுயஜாதி அபிமானத்தையும் அனுசரித்தே கதை சொல்லுகிறார்கள்.

பார்ப்பன புரட்டுகளில் ஈடுபட்டு பார்ப்பனர்களுக்கும் கோவில்களுக்கும் கொடுத்து ஓட்டாண்டியாகப்போவதே மேல் என்னும் குருட்டு எண்ணம் மேலிட்ட பார்ப்பனரல்லாத சோணகிரிகளால் வழங்கப்படும் திரவிய லாபத்தை அனுபவிப்பது பாகவதர்களும் அவர் கோஷ்டியாருமாகும். கஷ்டப்பட்டுத் தேடிய பொருளைக் கொடுத்து விட்டு இஞ்சிதின்ற குரங்கைப்போல்பல்லை இளித்துக்கொண்டு கதையைக் கேட்டுக் கொண்டு வீணே வீட்டுக்குத் திரும்புவது பார்ப்பனரல்லாதாரேயாகும். அந்தோ! அந்தோ!! பார்ப்பனரல்லாத சமூகம் புராணங்களை ஆராய்ந்து பாராமல் குரங்குப் பிடியாய் பிடித்துக் கொண்டு ஏமாறுவதைப் பார்க்கவேண்டுமேயானல்கும்பகோணத்தில்நன்ருக பார்க்கலாம். இத்தகைய கதா பிரசங்கத்தில் மார்க்கண்டர் சரித்திரத்தை உபமான கதையாகச் சொல்லிக்கொண்டு வரும்போழுது மார்க்கண்டர் காலையில் எழுந்ததும் ஒரு பார்ப்பனனைச் சுற்றி வந்து நமஸ்கரித்துக்கொள்ளுவது வழக்கம் என்றும் ஒரு நாள் திருக்கடையூருக்குப் பயணப்பட்டுப் போகின்ற காலத்து பொழுது விடியவே சுற்றிவந்து நமஸ்காரம் செய்துக் கொள்ள ஒரு பார்ப்பனராவது அகப்படவில்லை. அந்த சமயத்தில் இரண்டு பிள்ளைகளை வைத்துக்கொண்டிருந்த ஒரு புலைச்சி (ஆதிதிராவிடமாது) ஒரு பிள்ளைக்குப் பால் கொடுத்து விட்டு அந்த ஸ்தனத்தை திரும்ப ஜலம் விட்டலம்பிய பிறகு மற்றொரு பிள்ளையை தூக்கிப்பால் கொடுத்தாள். அதைக்கண்ட மார்க்கண்டேயர் அவ் வாதிதிராவிட மாதை விளித்து அம்மா? என்ன நீர் செய்த காரியம் மகா விந்தையாக இருக்கின்றதே. ஒரு பிள்ளைக்குப் பால்கொடுத்த ஸ்தனத்தை அலம்பிவிட்டு மற்றொரு பிள்ளைக்குப் பால்கொடுத்த காரணம் என்ன என்று வினவ அதற்கு அந்த ஆதிதிராவிட மாது ஐயா? நீர் சந்தேகப்பட்டது உண்மைதான் முதலில் பால் கொடுத்தப் பிள்ளை எனது சொந்த புருஷனுக்குப் பிறந்த பிள்ளை இரண்டாவது பால் கொடுத்த பிள்ளை எனது ஆசை நாயகனுன ஒரு பார்ப்பனனுக்குப் பிறந்தது. அதனல் தான் இரண்டாவது பால்கொடுத்தப் பிள்ளைக்கு எனது ஸ்தனத்தை அலம்பி விட்டுக்கொடுத்தேன் என்று விடைபகர உடனே மார்க்கண்டேயர் அந்தபார்ப்பனருக்குப் பிறந்த பிள்ளையைக் கீழே விடச் சொல்லி சுற்றி வந்து நமஸ்காரம் செய்துக்கொண்டு திருக்கடையூருக்குப் போகவே திருக்கடையூரில் உள்ள சிவன் இந்த மார்க்கண்டருக்கு பரிந்து கொண்டு எமனைசங்கரித்தான் என்றும் மார்க்கனுக்கு சிரஞ்சீவியாக இருப்பாய் என்று சாகாவரங்கொடுத்ததாகவும்பக்கவாத்தியசுதிமுழங்கநடைநொடிபாவனைகளுடன் பிரமாதமாகச் சொன்னர், இந்த விடத்தில் தான் சுயநலவெறி கொண்ட பார்ப்பனர்களும், பாகவதர்களும் எவ்வளவுதூரம் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு கெளரவம் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை வாசகர்களின் ஆராய்ச்சிக்கே விட்டு விடுகின்றேன்.

நிற்க விபசாரத்தைக்கைக்கொண்ட ஒரு விபசாரியின் குழைந்தையைசுற்றிவந்த மார்க்கண்டருக்கு சிவன் பரிந்து எமனை சங்கரித்தான் என்ருல் சிவன் விபசாரத்தை ஒப்புக் கொள்ளுகின்ருரா அல்லது பார்ப்பனரல்லாத ஒரு பெண்ணை ஒரு பார்ப்பனன் சோரத்தனமாகக் கூடலாம் என்ற ஆபாசமான ஒரு தலை நியாயத்தை போதிக்கின்ருரா? அப்படி விபாசாரத்தையும் ஒரு தலை நியாயத்தையும் போதிக்கும் கடவுளைத்தானு நாம் வழிபாட வேண்டும் இவ்விழிந்த விபசார செயலை விளம்பரபடுத்தும் நூல்கள்தானு புண்ணிய புராணங்கள் இதை வெட்கமின்றி சொல்லு பாகவதர்கள்தானு பண்டிதர்கள் இந்த விஷயமான கதையை பார்ப்பனரல்லாத ஆண் பெண் அடங்கிய ஒரு பெருத்த சமூகத்திடையே ஒரு பார்ப்பான் துணிந்து சொல்லவும் அதைக் காதால் கேட்கவேண்டி அந்தகதாகால க்ஷேமத்திற்கு பொருளுதவிசெய்யவும் போகும் பார்ப்பனரல்லாதார் தமது மானத்தையும், சுய அறிவையும், தன் மதிப்பையும், என்னென்று சொல்லுவது மேலும் இவர்கள் அந்த பாகவதர்களுக்கு அல்லது அந்த பார்ப்பனர்களுக்குஎப்படிப் பணம்கொடுத்துவருகின்ருர்கள் என்பதுதான் புலனுகவில்லை.

இத்தகைய ஆபாசமான அசங்கிதமான அறுவறுக்கத் தக்க கதைகளை கேட்டுபெருமாள் மாடுபோல் ஆமாம் சாமிஆமாம் சாமிஎன்று தலையாட்டும் பார்ப்பனரல்லாத பக்தர்கள்தான் ஆஸ்திகர்களாம்.மற்றபடி அந்த பாகவதர்களின்பார்ப்பனர்களின் சூழ்ச்சிவலைகளில்சிக்காது ஆண்தன்மையுடன் தன்மதிப்பையும் மானத்தையும் காப்பாற்றிக் கொள்ளவும் சமூக விடுதலையை நாடி புராண ஆபாசங்களை வெளிப்படுத்தும் ஆராய்ச்சியில் வல்ல நிபுணர்களெல்லாம் நாஸ்திகர்களாம். என்னே இவர்களின் சூட்சித்திரம்.

நண்பர்களே! உலகத்திலே மகா பெரியது ஆன என்றஆர் 101 என்ற ஆகாய விமானத்தை செய்து முடித்து ஆகாயத்தைக் கூறு போடும் சிறந்த அறிவாளிகளான மேல் நாட்டு மேதாவிகளான பண்டிதர்களுக்கு பிரம்மஸ்ரீ பட்டம் பொருத்தமானதா? அல்லது விபசாரியாம் ஒரு விதைவையின் பிள்ளையை சுற்றிவந்தால் சாகா வரம் பெறலாம் என்று கதை சொல்லும் பாகவதற்கு பிரம்மஸ்ரீ பட்டம் பொருத்தமானதா? அல்லது [கோல்டன் எரோ] "தங்க அம்பு;" என்ற மோட்டார் வாகனத்தைச் செய்து முடித்து ஒரு மணிக்கு 231 மைல் வேகம் செல்லுவேன் என்று மார்தட்டும் மேஜர் சக்கிரேவுக்கு பால சரஸ்வதி பட்டம் பொருத்தமானதா அல்லது? பிராமண வித்து பெருமையைப் பற்றிப் பிரமாதமாக கதை சொல்லும் பாகவதர்களுக்குப் பால சரஸ்வதி பட்டம் பொருத்தமானதா?

ரெயில்கண்டு பிடித்து அதன் மூலம் புகை வண்டி ஒரு நிமிஷத்திற்கு 2 மைல் 3 மைல் வீதம் செல்லலாம் என்று கூறும் நூதனப் பொருள் கண்டு பிடிப்பதில் வல்லவரான எம் ஆர் ஜார்ஜ் பென்னி என்ற எடின்பரோ நகரத்துப் பண்டிதருக்கு மஹா மஹோபாத்தியாயர் என்ற பட்டம் பொருத்தமானதா! அல்லது 12 வயதாக இருந்த விவாக வயதைஉயர்த்தி இரண்டு வருடம் அதிகமாக்குவதற்குக் காரணமாக இருந்த அறிவிலாச சாரதாவை அறிவிலாத சாரதா என்று கூறும் பண்டிதர்களுக்குமஹாமஹோபாத்தியாய என்ற பட்டம் பொருத்தமானதா? அல்லது எச். டி. பெரியார் எம். எல். ஆர் என்ற ரேடியோ கிராபரான மேல் நாட்டு சரீர சாஸ்திர நிபுணருக்கு சாஸ்திர பாரங்கதரர் என்ற பட்டம் பொருத்தமானதா? அல்லது "பிராமணன் வாயிலாகவே பிதுரு தேவதைகளை பூஜிக்க வேண்டுமே ஒழிய பிராமணர்களை விலக்கி நேரில் பிதுரு தேவதைகளை பூஜித்தால் அதை அவர்கள் பெருவதுமில்லை நமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதுமில்லை கர்ப்பிணிகள் புசித்தல் மூலம் கர்ப்பத்திற்கு திருப்தி ஏற்படுவது போல பிராமணர்கள் புசித்தல் மூலம் அவரது சரீரத்தில் வந்தபிதுரு தேவதைகளுக்குத் திருப்தி ஏற்படுவது நிசயம் அவர்கள் திருப்தி அடைதல் மூலம் நம் பிதாமாதா முதலியவர்களுக்கும் திருப்தியை உண்டு பண்ணி விடுகின்றனர் என்று கொள்ள வேண்டும்" என்ற. சுயநலப் பேய் தலை சுற்றி ஆட இல்லாத கற்

[13-ம் பக்கம் பார்க்க]

## ஓர் வேண்டுகோள்.

### 50 வருஷத்திற்கு முன் சுயமரியாதை இயக்கம்.

சுமார் 40, 50 வருஷத்திற்கு முன் பதிப்பித்ததும், **இந்து மத ஆச்சார ஆபாச தரிசினி** என்ற பெயர் கொண்டதும், 762 பாடல்களை உடையதும, கிரௌவுன் ஒண்ணுக்கு எட்டு சைசில் 120 பக்கங்களை உடையதுமான ஒரு தமிழ் புத்தகம் எங்கேயாவதும், யாரிடத்திலாவதும் கிடைக்குமானல் தயவுசெய்து வாங்கி உடனே நமக்கு அனுப்பிக்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகின்ருேம்.

ஏனெனில் அப்புத்தகம் ஒன்று நமக்கு ஒரு மாதத்திற்கு முன் ஒரு நண்பரால் அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆனல் அது மிக்க பழயதாகவும் முதலிலேயே சில பக்கங்கள் இல்லாமலும் சில பக்கங்கள் கிழிந்து சரிவாத் தெரியாமலும் இருப்பதால் கிழியாத புத்தகம் ஒன்று வேண்டியிருக்கின்றது. அப் புத்தகம் நமது இயக்கக்கொள்கைகளையே முக்கியமாய் வைத்துப் பாடின பாட்டுகள் அனேகம் அதில் இருக்கின்றன

ஈ. வெ. ரா.

# இதிகாசங்கள்.

## இராமாயாணம்—சுந்தரகாண்டம்

கட்டுரை—14

திரு. சந்திரசேகரப்பாவலர்)

(சருக்கங்கள் 53 முதல் 60 முடிய)

இராவணன், "தூதர்களைக் கொல்லலாகாதென்பது நியாயமே. ஆதலின் இவனுடைய வாலில் தீ வைத்து இவனை இந்நகர் முழுவதிலும் கொண்டு போய்க்காட்டுங்கள்" என்று கட்டளையிட்டான் அரக்கர் அனுமானுடைய வாலில் பழைய துணிகளைச்சுற்றி எண்ணெயைக்கொட்டித் தீ வைத்தார்கள். அனுமான், "கட்டுக்களை அறுத்தெறிந்து இவர்களைக் கொல்லவல்லேன் என்றாலும் இராமன் சபதம் வீணாகும். இதனால் இவ்வூர் முழுவதையும் நன்றாகக் காண்பேன். இவர்கள் என்வாலை எப்படி வேண்டுமானாலும் கொளுத்தட்டும்" என்று தீர்மானித்து அரக்கர் பின் சென்றான். பலவகை வாத்தியங்கள் முழங்க வரும் அனுமானை வேடிக்கை பார்க்கப்பெண்களும் குழந்தைகளும் வந்து கூடி அவனுடைய வால் தீப்பிடித்தெரிவதைக் கண்டார்கள்.

இது செய்தியை அரக்கியராலறிந்த சீதை தீக்கடவுளை வேண்டினாள். அதனால் அவன் (தீக்கடவுள்) அனுமானைச்சுடவில்லை. இதுகண்ட அனுமான் வியப்புற்றான். பின் அவன் திடீரென்று பாய்ந்து கோட்டைவாயிலை அடைந்து தன் உடலைக்குறுக்கித் தன்மேல் இருந்த கட்டுக்களை யெல்லாம் உதறினான். அதன் பின் அங்கிருந்த இருப்புத்தடியால் அங்கிருந்தாரைக் கொன்றான்.

அனுமான் இலங்கையிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் பாய்ந்து வீடணன் வீடு தவிர எல்லா வீடுகளிலும் தீ வைத்தான். இந்திரசித்தன், கும்பகர்ணன், இராவணன் முதலிய எல்லோருடைய வீடுகளும் எரிந்தன. தீ மண்டி எரிந்து ஒன்றுகூடப் பாக்கியில்லாமல் எல்லாவற்றையும் எரித்தது. அனுமானுக்கும் சீதைக்கும் நலம் செய்யும் வீடணன் வீடுமட்டும் எரியவில்லை.

அனுமான் தன் வாலைக்கடலில் முக்கித் தீயை அணைத்தான். பின் அவன் இலங்கை முழுதும் எரிந்தமை கண்டு சீதையும் அதனோடு எரிந்து விட்டாள் என்று எண்ணி அழுதான். அவளோடு இராம லக்குணர், சுக்கிரீவனாதியோர், பரதனாதியோர், உலகம்ஆகிய வெல்லாம்அழிந்துவிடுமே என்று ஏங்கினான். அப்போது சில சாரணர், "இலங்கை முழுதும் எரிந்தும் சீதை மட்டும் உயிரோடிருக்கிறாள்" என்று பேசியதை அவன் அறிந்து கவலை தீர்ந்தான்.

அனுமான் சீதையைக்கண்டு வணங்கி விடைபெற்று அரிட்டம் என்ற மலைமேல் ஏறினான். அதனால் அந்த மலை நடுங்கிற்று. அதிலிருந்த சிங்கம் முதலிய உயிர்கள் நசுங்கி அழிந்தன. தேவ கின்னர உரக கந்தர்வ இயக்க வித்தியாதர கணங்களெல்லாம் துன்புற்று ஓடினர். அனுமான் மேலே கிளம்பினான். அம்மலை தரையோடு தரையாயிற்று.

அனுமான் கடலைத்தாண்டிச்சென்றான். வழியில் மைநாகமலையைக் கண்டு நடந்ததைக்கூறி பேரிரைச்சலோடும் வந்தான். அங்கதன் சாம்பவன் முதலிய அனைவரும் அவனைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியடைந்தனர். அங்கதன் அவனைப்புகழ்ந்து நடந்த வரலாற்றை விரித்துக்கூற வேண்டினான்.

சாம்பவன், "இராமனிடம் எதைக் கூறவேண்டும் எதை மறைக்கவேண்டுமெனக்கூறு" என வேண்டினன். அனுமான், "நான் போகும் வழியிலிருந்த மைநாகமலையின் சிகரத்தை வாலால் அடித்து நொறுக்கினேன். அது பணிந்தது. நான் சுரசையையும் சிம்மிகையையும் கொன்று இலங்கையில் குதித்து தேவதையை வென்று இரவில் நகரெங்கும் தேடி கடைசியில் சீதையை அசோகாவனத்தில் கண்டேன். அவள் ஒற்றை உடையுடன் இருந்தாள். அப்போது இராவணன் வர நான் மரத்தில் ஒளிந்து கொண்டேன். சீதை துடைகளை நெருக்கிக்கொண்டு கைகளால் தனங்களை மறைத்துக்கொண்டாள். இராவணன் அவளை வணங்கித் தனக்கு இசைய வேண்டினான். சீதை அவனை இகழ இராவணன் அவளை அடிக்க ஓடினான். மணடோதரி அவனைத் தடுத்து அரண்மனைக்கு அழைத்தேகினாள்" என்று கூறி பின் தான் சீதையுடன் பேசி மோதிரம் தந்து சூடாமணியை வாங்கி அரக்கருடன் போர் செய்யவிரும்பி அசோகவனத்தை அழித்ததையும் அக்கன் முதலியோரைக்கொன்று இந்திரசித்தினால் கட்டுண்டதையும் புகன்றான். பின் தான் இராவணனிடம் கொண்டு போகப்பட்டு சுக்கிரீவனுடைய தூதனெனச் செய்தி கூறியதையும் இராவணன் தன் வாலில் தீயிட்டதையும் தன்னை அரக்கர் தெருத்தெருவாக அழைத்துச் சென்றதையும் பின் தான் இலங்கையில் தீ மூட்டியதையும் சீதையைக் கண்டு திரும்பியதையும் அவன் கூறினான்.

அனுமான் மேலும் கூறினான் "கற்பரசியாகிய சீதையைத் தொட்டெடுத்தும் இராவணன் கெடாமலிருப்பதன் காரணம் என்னவென்றால், அவன் செய்தற்கரும் தவம் செய்து பிறரால் அடைய முடியாத ஆற்றலையும், புகழையும் ஒளியையும் பெற்றிருக்கிறான். எல்லா உலகங்களையும் பாதுகாப்பான் சினம் கொண்டால் அவைகளையெல்லாம் அழிக்கவும் வல்லவன். அதனால் அவன் சீதையைத் தொட்டும் கெடவில்லை. இராவணாதியோரை கொல்லுவது எனக்கும்உங்களுக்கும் ஒரு பொருட்டல்ல. ஆதலால் அவ்வாறு செய்து சீதையுடன் இராமனைப் பார்க்கவேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அவ்வாறே செய்வோம். சீதை வரம்பழியாதிருக்கின்றனள். பின்ஏன் அவள் இராவணனைத் தானே கொல்லலாகாதென்பீர்களேயானால் அவன் மஹானுபாவன். அவனுக்கு சாபத்தினால் துர்மரணம் சம்பவிக்காது. இராமனே அவனைக்கொல்லவேண்டும். இனிச்செய்யவேண்டியதைச் சொல்லுங்கள்."

அங்கதன் "வீரராகிய நாம் சீதையை அழைத்துக்கொண்டுதான் இராமனைக் காணவேண்டும்" என்றான். சாம்பவனோ, "நாம் இராமனுடைய அனுமதி பெற்றே எதையும் செய்ய வேண்டும்." என மொழிந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

அனுமானுடைய வாலில் தீ வைத்ததும் அவன் அரக்கருடைய கட்டை மீறாமல் அவர்களுடனே ஊரெங்கும் சென்றான். ஊராரனைவரும் அவனை எள்ளி நகையாடினார்கள். இதனால் அவன் அவர்களுடைய கட்டை அறுத்தெறிந்துபோக வலியற்றவனாகவே இருந்தவனாவன். பின் அவன் திடீரென்று பாய்ந்து கட்டை அவிழ்த்துக்கொண்டு இலங்கை முழுவதையும் இராவணனுடைய அரண்மனை உட்பட தீக்கிரையாக்கினானாம். இது எவ்வாறு நடந்திருக்க முடியும்? அனுமான் இத்தகையவனாயின் இராவணனுக்கு முன்னர் வாலில் தீயிடப்பட்டபோதே அன்றோ துள்ளிக் குதித்து இலங்கை முழுவதிலும் தீயிட்டு அழித்திருக்கவேண்டும்? அவ்வாறு செய்யாமல் பின்னர் செய்தனன் என்பதெல்லாம் பிற்காலத்தார் கட்டுக்கதைகளாகவே இருக்கவேண்டும். முன்னர் வாலி இராமனுக்குப் பணிந்து மன்னிப்பு கேட்டான் என்று கூறிய இடத்து கிட்கிந்தா காண்டத்தில் தகுதியற்றார் இடைச்செருகல் என்பதும் பொருந்தா உரை என்பதும் விளக்கப் பெற்றது. இச்செய்தியும் அதைப் போன்றதோர் பொருந்தா உரையே. இவ்விடத்திலும் திரு சீனிவாசய்யங்கார் பக்கம் 225 ல் "சர்க்கங்கள் ஏறக்குறைய ஒரே அளவாயிருப்பது உத்தம காவ்ய லக்ஷணம். நமக்குள் வழங்கும் இராமாயண பாடத்தில் அப்படியில்லை. இதைப்போன்ற மிகச் சிறியசர்க்கங்களும் இந்தக்காண்டம் (சுந்தர காண்டம்) முதலாவது சர்க்கத்தைப்போல் மிகப் பெரிய சர்க்கங்களும் காணப்படுகின்றன. நமது பாடம் சுத்தம் அல்ல, புராதனம் அல்ல என்பதற்கு இது ஒரு காரணம்" என்று தெளிவாகக் கூறுகிறார். இதனால் புராதனமான இராமாயணத்தில் பிற்காலத்தோர் தமதுமனம்போலவேண்டிய மாறுபாடுகளையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பது வெளிப்படை. அவ்வித மாறுபாடுகளுள் ஒன்றே அனுமான் இலங்கையில் தீயிட்டுக் கொளுத்தினான் என்பதும்.

இராவணனுடைய ஆணைப்படி அரக்கர் அனுமனுடைய வாலில் தீயிட்டுக் கொளுத்தி ஊரில் வேடிக்கைகாட்டி ஊரை விட்டு வெளியே வந்ததும் அவனை அடித்துத்துரத்தியிருக்க வேண்டும். இதுவே உண்மையான வரலாராயிருக்க வேண்டும் இலங்கையில் தீ வைத்திருந்தால் இராவணன் முதலிய வீரர்களனைவரும் என்ன செய்தார்கள்! அவர்கள் ஒருவரும் தீயையணைக்க முயற்சிசெய்ய வில்லையா அதுபற்றிய செய்தியொன்றும் காணப்பெறவில்லையே! மெலும் கும்பகர்ணன் அரண்மனையும் வெந்து போனதாகக் காணப்படுகிறது அப்படியாயின் தூங்கியிருந்த கும்பகர்ணன் செயல்யாது? வீடணன் அரண்மனை ஒன்று மட்டும் பற்றி எரியவில்லையாம்! அவ்வாறு அறிவோடு அனுமான் தீவைத்தது உண்மையாயின் அவன் சீதை இருந்த இடத்தையும் விலக்கியிருப்பானன்றோ! அவ்வாறில்லாமல் சீதையே இறந்து போயிருப்பாளென்று அனுமான் அலறினானும்! இவையெல்லாம் முன்பின் பொருத்தமில்லாமல் பற்பலர் கை வைத்து மாற்றியமையை விளக்கும் உண்மைகள்! வேண்டுமென்று கட்டிய கதைகள்! இக்கதைகளேனும் பொருந்த உரைத்த பொய்களா! இல்லை. ஏனெனில் அறிவுடையார் கட்டிய கதைகளல்ல இவை. வகுப்பு வெறியாளர் கட்டியவைவேறு எப்படியிருக்கமுடியும்! இவர்களுக்கு இராவணன் முதலியோரை இகழ்ந்து அனுமானாதியரைப் புகழ வேண்டும்!!

சீதை தீக்கடவுளை வேண்டியதும் அதனால் அவன் அனுமானைச் சுடவில்லை என்பதும் மிகைபடக்கூறிய கட்டுக் கதைகளே. அனுமான் ஏறிய மலையும் அதிலிருந்த உயிர்ப்பிராணிகளும் பட்ட பாடுகள் மிகையுரைகளேனும் அவைகள் அனுமானுடைய மிருகத்தன்மையினையே புலப்படுத்துவன.


அனுமான் தன் வரலாற்றை அங்கதனாதியரிடம் கூறிய போது தன் வாளால் மைநாக மலையின் சிகரத்தை நொறுக்கியதாக கூறுகிறான். இது முன்னர் கூறியதற்கு மாறான செய்தியே. இதை திரு. சீனிவாசய்யங்காரும் பக்கம் 213 ல் "இது மூலவரவது சருக்கத்தில் சொல்லப்படவில்லை" என்று உண்மையை எழுதுகிறார் இதுவும் வால்மீகியில் காணப்படும் மாறுபாடுகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாவதோடு பிற்காலத்தார்செய்த மாறுபாடுகள் எண்ணிறந்தன என்ற உண்மையையும் நிலை பெறுத்தும்.

அனுமான் தான் சுக்கிரீவனுடை

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரியிலும் பார்ப்பன ஆட்டூழியம்

மதுரை கவர்மெண்டு ஆஸ்பத்திரியில் நான் சிக்காயிருந்த சமயம் அங்கு நடக்கும் அனியாயங்களைக் கண்டு சகிக்கக்கூடாமல் இவ்வியாசத்தை எழுதத் துணிந்தேன் டாக்டர்கள் பூராவும் பிராமணர்களாயிருப்பதால் கேட்பாரற்று காரியங்கள் நடக்கிறது. துரையவர்களும் கவனிப்பதாக இல்லை. பிராமண வியாதியஸ்தர்களுக்கு மட்டும் அங்கு தேவேந்திர போகம் கிடைக்கிறது. பிராமணரல்லாதாரா யிருந்தால் எவ்வளவு பெரிய மனிதராயிருந்தாலும் அவ்வளவு சவுகரியம் கிடைப்பது அருமை. சுருக்கக்கூறின் தற்காலம் மதுரை ஆஸ்பத்திரியானது பிராமணர்களுடைய பிதுரார்ஜித சொத்து உதாரணமாக நான் நேரில் கண்ட சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன். எரிக்ஷன் வார்டு 20நி-ர் படுக்கையிலிருந்த கிருஷ்ணசாமிநாயுடுவை மனைவி பார்க்க வந்த போது கொஞ்சம் காப்பி கொண்டுவந்த குற்றத்திற்காக டி யானுக்கு ஆஸ்பத்திரியிலிருந்த சாப்பாட்டை அடித்து விட்டார்கள். ஆனால் பிராமண வார்டில் ஒவ்வொரு வியாதியஸ்தருக்கும் வீட்டிலிருந்து 3 வேளை சாப்பிட அனுமதிப்பதுடன் ஆஸ்பத்திரியிலும் 3 பயிண்டு பால் 12 அவுன்ஸ் ரொட்டி வெண்ணை முட்டை சூப்பு சகலமும் உண்டு. மற்ற வார்டுகளில் வியாதியஸ்தர்களைப் பார்க்க வருகிறவர்களை சாயந்திரம் 4 மணி தவிர மற்ற நேரங்களில் அநுமதிப்பதில்லை. ஆனால் பிராமண வார்டில் எந்த நேரத்திலும் எவ்வளவுபேர் வந்தாலும் கேட்பதில்லை. ஒரு நாள் பிராமண வார்டுக்கு கொசுவலை இல்லை யென்று எனக்கு கொடுத்திருந்த கொசு வலையை எடுக்க வந்தார்கள். நான் துரையிடம் சொல்வதாகச் சொன்ன பிறகு எடுக்கவில்லை. இம்மாதிரி தர்மஸ்தாபனங்களிலும் சர்க்கார் பாரபட்சம் காட்டி நடந்து கொள்வது கண்டிக்கத்தக்கது. இனியும் பிராமண வார்டு அட்டூழியத்தை விரிக்கிற் பெருகும். மருந்து கொடுப்பதிலும் கூட்டுவதிலும் எவ்வளவோ வித்தியாசம் காட்டப்படுகிறது. ஆனால் இனிமேலும் இம்மாதிரி நடக்கவிடாமல் பார்த்துக் கொள்ளும் படியும் இந்த ஆஸ்பத்திரிக்கு பாதிப்பேராவது பிராமணரல்லாத டாக்டர்களாய் மாற்றும் படிக்கும் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் விசாரித்த மட்டும் பிராமண டாக்டர்கள் ஒவ்வொருவரும் 10,15 வருஷமாக உடும்பு மாதிரி ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதரசாதி டாக்டர்கள் 3 வருஷம் கூட இருக்க விடுகிறதில்லையாம் இந்த பிராமண டாக்டர்கள் ஒற்றுமையினால் இவர்களுக்கு இடைஞ்சல் உண்டாகு மென்று துரைக்கு பொடி வைத்து மாற்றி விடுகிறதாம் இது ஒரு ரகசியம். பிராமணவார்டு என்பதில் குடிகாரனும் மாமிசம் தின்பவனும் வருகிறான் அவனுக்கிருக்கும் மரியாதை பிராமணரல்லாத கௌரவ பேஷண்டுகளுக்கு கிடையாது. என மதுரை கோவிந்தசாமிநாயுடு அறிவிக்கிறார்.



முன்வரிசை:— மணமக்கள்.

பின்வரிசை:— 1. மணமகளின் தம்பி. 2. தகப்பனார். 3. நா. அ. சுப்பய்யா 4. கோண்டய்யா. 5. லெ. சு. கிருஷ்ணசாமி. 6. பி. பழனிவேல்.

பெரியகுளம் தாலூகா பண்ணைப்புரம் மஜரா, கரியணம்பட்டியில் திருவாளர். பி. நாகய்யா அவர்களுக்கும் திருவளர்ச்செல்வி வீருநாகம்மாளுக்கும் நாளிது தைத் திங்கள் 21-தேதியில் அர்த்தமற்ற சடங்குகள் நீக்கிய சுயமரியாதை விவாகம் 2-மணி நேரத்திற்குள் வெகு விமரிசையாக நடைபெற்றது.

டி விவாகத்தை தடைசெய்ய அநேகம் பேர்கள் ஏற்பட்ட போதிலும் நா. அ. சுப்பய்யா, அவர்களின் விடாமுயற்சியாலும் மணமகளின் தகப்பனார் நா. விரண கவுண்டரவர்களின் ஊக்கத்தாலும் ஆதிதிராவிடர்கள் முதல் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கிடையே விவாகத்தை நடைபெறச்செய்தும், மேல்கொண்டும், இம்மாதிரி விவாகம் நடந்தேற பெரு முயற்சியுடன் நிற்கும் மணமக்களின் குடும்பத்தாருக்கும் நா. அ. சுப்பையா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன் என்று திரு. மு. அ. முத்துவீரன் செட்டியார் எழுதுகிறார்

## காலண்டர்கள்

கீழ்க் கண்டவர்களிடமிருந்து காலண்டர்கள் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

திருச்சி புகையிலை வியாபாரம் திருகி. ஆ. பே. விஸ்வநாதம்பிள்ளை கம்பெனியின் விலையுயர்ந்த காகிதத்தில் அச்சடிக்கப் பட்டதும் புகையிலை காயவைத்தல், பதனிடுதல், அடுக்குதல் முதலியபல நிறப்பட்டபடங்களடங்கிய சுவற்றில் மாட்டக்கூடிய பெரிய காலண்டர் ஒன்றும் சென்னை பிரபல வைர வியாபாரியான சுராஜ்மால் அல்லது ராதா ருக்மணி கொண்ட அழகிய வர்ண ஆர்ட் பேப்பர் காலண்டரும், காஞ்சிபுரம் குமரன் பிரசின்றிலிருந்து கண்ணைக் கவரத்தக்க 3 வர்ணக்காலண்டர் ஒன்றும், மதுரை புஸ்தக ஷாப் எஸ். கூடலிங்கம்பிள்ளையால் தலைவர் தியாகராயர் அவர்களின்படத்தோடுவிளங்கும் காலண்டர் ஒன்றும், நாகபட்டணம் இம்பீரியல் ஸ்டீல் டிரங் தொழிற்சாலைக் காலண்டரும் சென்னை பெடரேட் இந்தியா பத்திரிகை காரியாலயத்தினின்று ஒன்றும், வலங்கிமான் கே. என் காதர் அவுலியா பரிமளச் சாலையினின்று ஒன்றும், ஈரோடு சென்ட்ரல் பிரசினின்று ஒன்றும் நாகரத் அன்பயைன்கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூடினின்று ஒன்றும், சேலம் சுருட்டுத் தொழிற்சாலை எம். சையத் அமீர் சாயபுனிடமிருந்தும், காவேரிப்பட்டினம் பி என். குப்புசாமி நாயுடுவினிடமிருந்தும், திருச்சி சராப் வியாபாரம் மொத்தி ஸ்ரீராமலு செட்டியாரிடமிருந்து ஒன்றும், சூளை நார்ட்டரன் டைப் பௌண்டரியினின்று ஒன்றும், ஈரோடு வாணிவிலாஸ் பிரசினின்று ஒன்றும், முக்கூடல் கிளிமார்க் பீடி தொழிற்சாலை டி. என். கம்பெனியாரிடமிருந்துஒன்றும்வரப்பெற்றோம். இந்தக் காலண்டர்களை அன்புடன் அனுப்பிய கனவான்களுக்கு வந்தனத்துடன் நன்றி செலுத்துகிறோம்.

## கரூர் முனிசிபாலிட்டி

சுங்க கேட், மார்க்கெட் வகையராக்கள் ஏலம் 27—2—29-ம் தேதி வியாழக்கிழமை காலை 9-மணிக்கு முனிசிபல் ஆபீசில் நடைபெறும்.

டி. எஸ். முத்து
குமாரசாமி பிள்ளை,
சேர்மென்.

## திருத்தம்

4-ம் பக்கத்தில் இது தானா ஆஸ்திகம், என்னும் கட்டுரை திரு. குடந்தை வாசன் எழுதியது.

---

21—1—30-ல் பவானிக்கூடுதுறையில் நடந்த வாத ஒப்பந்தப்படி ஷை யூர் உயர்தரப் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் திரு. கு. குமாரசாமிப் பிள்ளையவர்களை சுயமரியாதை வீரர் திரு. ஜெயவீரசிம்ம நாவலர் வினவும் வினாக்கள்.

1. உலகம் உருவக்கடவுளின் படைப்பா?
2. ஆதியில் ஆன்மாவுக்குக் கர்மம் எப்படி வந்து சேர்ந்தது
3. வேதம் கடவுளால் உண்டாக்கப் பட்டதா?
4. பொய்ப்புராண சாஸ்திரங்களைப் பொசுக்க வேண்டாமா
5. மூடப் பழக்கவழக்கங்களை முறியடிக்க வேண்டாமா

ஓ குமாரசாமிப் பிள்ளையவர்களே!

நாம் உலகம் உருவக் கடவுளின் படைப்பல்ல வென்றும், ஆதியில் ஆன்மாவுக்குக் கர்மம் இல்லை என்றும், வேதம் சுயநலப் பார்ப்பனரால் ஆக்கப்பட்டதென்றும் பொய்ப்புராண சாஸ்திரங்களைப் பொசுக்க வேண்டுமென்றும் மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்க வேண்டுமென்றும் கூறுகிறோம். தங்கள் எவ்வகையிலேனும் எமது கூற்றை மறுத்துத் தக்க ஆதாரங்களுடன் விடைதரவல்லீரா? உம்மாலேனும் உமது சிஷ்ய கோஷ்டிகளாலேனும் உம்மினத்தவராகிய பண்டிதர்களாலேனும் பதில் கூற முடியுமா? விடை தர வழியில்லை

---

## கரந்தைத் தமிழ்ச் சங்க பெருநிதிச் சீட்டு.

### அறிக்கை

சுமார் பதினையாயிரம் சீட்டுகள் வரையில் வெளியில் தங்கியிருப்பதாலும் விற்கப்பட்ட சீட்டுகள் வெளியிலிருக்கும்போது சீட்டுப்போடுவது முறையல்லாததாலும் குறிப்பிட்டபடி 18—1—30-ல் சீட்டு குலுக்குவதை நிறுத்திக்கணக்குமுடிப்பதற்கு 15—3—30 வரையில் நாள்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை 15-3-30 க்குள் சீட்டு விற்பனை செய்பவர்கள் சீட்டு புத்தகங்களையும், விற்பனைத் தொகைகளையும் கணக்குடன் தவறாது அனுப்ப வேண்டியது. மேற்படி நாளைக்குள், போதிய அளவு முன்னரே விற்கப்பட்ட சீட்டுகள் வந்து சேர்ந்தால், 15-3-30 லாவது, அதற்கு முன்னராவது சீட்டுக்குலுக்கப்படும். சீட்டுப் போடும் நாளை பத்திரிகை வாயிலாக, அறிவிக்கப்படும்.

நா. கந்தசாமிப் பிள்ளை
(Retired Engineer)
சீட்டின் தலைவர்.

## விளம்பரம்

கோயமுத்தூர் ஜில்லா பல்லடம் தாலூகா பல்லடத்திலிருக்கும் சா. குமறப்ப செட்டியாரவர்கள் 2-வது குமாரர் சா. கு. லெக்ஷ்மணன் செட்டியார் இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதாவது:—

என் தகப்பனார் ஷை சா. குமறப்ப செட்டியார் (1) என் தமயனார் சா. கு. முத்துசாமி செட்டியார் (2) இவர்கள் இருவருக்கும் நான் 1930ஆு பிப்ரவரிமீ 18உ எழுதிக் கொடுத்திருக்கும் ரிஜிஸ்தார் விடுதலை தஸ்தாவேஜ் மூலம் ஷை என் தகப்பனார் தமயனார் ஷை யார் குமாரர்கள் பங்கில் பொது குடும்பத்திலிருந்தும் சொத்திலிருந்தும் நான் அறிறியாய் விலகிக்கொண்டு விட்டபடியால் ஷை தேதி முதல் ஷை யார் வகைராவுக்குப் பாத்தியப்பட்டு மேற்படியார்கள் சுவாதீன அனுபவத்திலிருந்து வருகிற எவ்வித சொத்துக்களிலும் லேவாதேவிகளிலும் இனிமேல் மேற்படியார்கள் சம்பாதிக்கும் சொத்துகளிலும் எவ்வித பாத்தியமும் சம்மந்தமும் துடர்ச்சியும் எனக்காவது என் வார்சுக்காவது இல்லை என்று இதனால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

18-2-30 } சா. கு. லக்ஷ்மணன்
பல்லடம் } செட்டியார்

---

## தேவை

நன்கு வேலை செய்யக்கூடிய 8 முதல் 12 குதிரைப்பவர் (N.H.B) வரையுள்ள துமான ஸ்டிம் இஞ்சின் தேவை ஒன்றுசேர்ந்ததாகவும், வெவ்வேறாகவும், பாயிலர் மட்டுமாகவோ யிருக்கலாம். காரியஸ்தர்,

தீப்பெட்டி கம்பனி
பாலக்காடு (தென்மலபார்)

---

## விளம்பரம்

1930-வது வருஷம் பிப்ரவரி மாதம் 8 தேதி ஏலம் போடுவதாய் தீர்மானித்திருந்த டோல் கேட்டுகளை மேற்படி தேதியை மாற்றி 1930-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28 தேதி பகல் 12 மணிக்கு ஏலம் போடப்படும்.

W. P. A. சௌந்திர பாண்டியன்
பிரசிடெண்டு
ராமனாதபுரம் ஜில்லா போர்ட்

## ஆண்டு விழா

தென்மாட்டு வைக்கம் வீரர் வாசக சாலை ஆண்டு விழா மார்ச்சு மாதம் இரண்டாவது வாரம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி, டப்பள்யு பி. ஏ. சௌந்தர பாண்டியன், கைவல்யசாமியார், எஸ். ராமநாதன், எஸ் முருகப்பர். கி. அ. பெ. விஸ்வநாதம் முதலியவர்கள் விஜயம்செய்வார்கள்.

---

## தேவை.

ஈரோட்டில் நடைபெறும் "ரிவோல்ட்" (ஆங்கில) பத்திரிகைக்கு உபபத்திராதிபர் தேவை ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி உள்ளவராகவும். அறிவு இயக்க கொள்கை (Rationalistic views) உடையவராகவும் இருக்கவேண்டும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

பத்திராதிபர்
ரிவோல்ட்
ஈரோடு.

---

# விளம்பரம்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டுசெலவில் மதுரை பெண்பிள்ளை கவர்மெண்டு ஆஸ்பத்திரியில் மருத்துவம் பயின்று பழக மணுக்கள் தேவை ஷை மருத்துவம் ஒரு வருஷம் பயிலவேண்டும். பயில விரும்புவோர்கள் இந்த இராஜதானியிலுள்ள பாஷைகளில் ஏதேனும் ஒன்றில் நன்றாய்எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கவேண்டும். தேர்ந்து எடுக்கப்பட்ட மாணுக்கர்களுக்கு மீ 1-க்கு ரூ. 15 வீதம் ஒரு வருஷ சம்பளமும் ரூ. 30 துணிச்சிலவும் கொடுக்கப்படும். புறப்படும் இடத்திலிருந்து மதராஸ் போவதற்கு 3-வது வகுப்பு ரெயில் சார்ஜ் கொடுக்கப்படும். மருத்துவம் படித்து முடிந்த பிறகு மதராஸிலிருந்து திரும்பி வர ரெயில் சார்ஜும் கொடுக்கப்படும். மாணுக்கர்கள் இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களுக்கு ரூ. 300 க்கு ஒரு பாண்டு எழுதிக்கொடுக்க வேண்டும். மருத்துவத்தில் பழகித் தேர்ந்த பிறகு ஷை ஜில்லா போர்டார் ஆதினத்தில் 5 வருஷ காலத்திற்கு மருத்துவச்சிகளாக லோக்கல் பண்டு ஆஸ்பத்திரிகளில் வேலை பார்க்க வேண்டும்.

இஷ்டமுள்ளவர்கள் 1930 ஆு ஏப்ரல் மீ 15 உக்குள் மதுரையிலுள்ள இராமநாதபுரம் ஜில்லா பிரசிடெண்டவர்களுக்கு அடியில் கண்ட விபரங்களுடன் மனுச் செய்து கொள்ளவேண்டும்.

1. பெயர்
2. வயது
3. பிறந்த இடம்
4. தற்கால விலாசம்
5. ஜாதி
6. தேகசௌக்கியத்தின் நிலைமை
7. படிப்பின் அளவு
8. தற்காலம் உள்ள வேலை
9. நன்றாய் பேசவும் ஏதாவது விஷயத்தைப் பற்றி நன்றாய் விஸ்தரிக்கவும் தெரியுமா?
10. நன்னடக்கை மரியாதை இவைகளைப்பற்றி யோக்கியதாபத்திரங்கள்
11. ஜாமீன் கொடுப்பவரின் பெயரும் விலாசமும்.

(Sd)

ராமநாதபுரம் ஜில்லா போர்டு மதுரை. } W. P. A. சௌந்திரபாண்டியன்
பிரசிடெண்டு


## ஸ்ரீ கிருஷ்ண பரிமள ஸ்டோர்

எங்களிடம் கோடையின் வெப்பத்தை தணித்து குளிர்ச்சியை உடனே கொடுக்கக் கூடிய அருமையான மூலிகைகள் சேர்ந்த சந்தனாதி தைலம் கூந்தலை கருநிறமாக்கி பள பளப்புடன் வளரச் செய்வதற்கு அறைக்கீரை விதைத்தைலமும் இன்னு மனேக வாசனை சாமான்களும் குல்கந்து பல காய் கறி ஊறுகாய்களும் கிடைக்கும்.

சந்தனாதி தைலம் டின் 24 ரூபாய் எடை உள்ளது ரூ. 1—0—0
அறைக்கீரை தைலம் ஷை எடை 1—2—0
கேட்டவாக் இனுமாக அனுப்பப்படும்

ஸ்ரீ கிருஷ்ண பரிமள ஸ்டோர்
வலங்கை மான் (Via) கும்பகோணம்.

"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

ஈரோடு 1930 பிப்ரவரி மீ 23-உ

# பூரண சுயேச்சைப் புரட்டு.

## II.

1929-ம் வருஷம் காங்கிரசானது "இந்தியதேசியப் போராட்டம்" என்பதின் இரகசியத்தை வெளியாக்கி விட்டது ஒரு புறமிருக்க இப்போது ஏதோ சத்தியாக்கிரகப்போர் சமீபத்தில் தொடுக்கப்போவதாக பெரியஆர்பாட்டங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றன. ஆனால் இவ்வார்ப்பாட்டங்கள் காங்கிரசுக்கோ காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கோ ஒருசிறிதும் சம்மந்தமில்லாமல் திரு. காந்தி அண் கோ கம்பெனியாருக்கு கன்ட்ருக்ட்டு விடப்பட்டு விட்டதாய்த்தெரிகின்றது. இதன் கருத்து என்னவென்றால திரு. காந்தியால் ஏதாவது வெற்றி (ஏற்படப்போவதில்லை உறுதி உறுதி) ஏற்படுமானால் உடனே அதை தேசிய வெற்றி என்று கொட்டை எழுத்தில் போட்டுபெருமைபாராட்டிக் கொள்ளவும்தோல்வி அடைந்தால் "முன்னமேயே தெரிந்து தான் அதன் பொருப்பை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாமல் திரு. காந்தியின் தலையில் போட்டு விட்டது" என்று சொல்லவும் இடம் வைத்துக்கொள்ள செய்தகாரியமேயாகும்.

அன்றியும் மேற்படி சத்தியாக்கிரகத்தையோ சட்டம் மீறுவதையோ சர்க்கார் மதித்து ஏதாவது நடவடிக்கை எடுத்து எந்த தனிப்பட்ட நபரையாவது அல்லது எந்த ஸ்தாபனத்தையாவது கைதிசெய்யஆரம்பித்தால "காங்கிரசுக்கும் சத்தியாக்கிரக சட்ட மறுப்புக்கும் யாதொரு சம்மந்தமில்லை" என்று சொல்லி தப்பித்துக்கொள்ள இடம் இருக்கவும் வழி செய்துகொண்ட காரியமாகும்.

முதலாவது காங்கிரசின் லட்சியம் பூரண சுயேச்சை என்றவுடன் ராஜிநாமா கொடுத்து விட்டு காங்கிரசை விட்டு ஓடின வீரர்களைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. அதோடு காங்கிரசில் இருந்து கொண்டே "காங்கிரஸ்கொள்கைக்கு நாங்கள் கட்டுப்படுகின்றோம். ஆனால் அதின்திட்டத்திற்கு நாங்கள் கட்டுப்படமாட்டோம் என்று சொல்லிக் கொண்டு காங்கிரஸ் வீரர்களாய் இருந்து வந்தவர்களைப் பற்றியும் நாம் இப்போது அதிகமாய் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் இப்படி ஒரு கூட்டம் காங்கிரசில் வெகு நாளாகவே இருந்து வருகின்றது. அதாவது எவ்வித தியாகத்திற்கும் கஷ்டத்திற்கும் தயாரில்லாமல் பாமர ஜனங்களை ஏமாற்றி வயிர் வளர்ப்பதற்கு காங்கிரசை உபயோகித்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தமுள்ள கூட்டத்திற்கு இதை விட வேறு வழி கிடைப்பது கஷ்டமானதால் இப்படி ஒன்று அதாவது "காங்கிரஸ் சுயராஜ்ய கட்சி" "காங்கிரஸ் தேசிய கட்சி" "காங்கிரஸ் சுயேச்சைக் கட்சி" "காங்கிரஸ் ஒத்துழையா கட்சி" என்கின்றகட்சிகளின் பெயர்களின் நிழலில் இருந்து வந்த பெரும்பான்மையானவர்களின் யோக்கியதைகளைக் கவனித்தாலே இந்த உண்மை விளங்கிவிடும். ஆனால் இப்போது காங்கிரசு ஆதிக்கத்திலும் நிர்வாகத்திலும் இருந்து வருகின்ற காங்கிரஸ் தலைவர்கள் என்கின்றவர்கள் இந்த மாதிரி தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது காங்கிரசின் உண்மைத்தோற்றத்தின் பரிதாபநிலையையும் பயங்காளித்தனத்தையுமே காட்டுகின்றதே யல்லாமல் வேறில்லை. அன்றியும் ஒரு சமயம் சத்தியாக்கிரகமோ சட்ட மருப்போ நடந்து யாராவது ஜெயிலுக்குப் போக நேர்ந்தால் அப்படிப்போனவர்களையும் இந்த காங்கிரஸ் தலைவர்கள் திரு.சி.ஆர்.தாஸ் அவர்கள் முன் ஒரு சமயம் கயாவில்சொன்னதுபோல் "சாப்பாட்டுக்கு வகையற்றவர்களும் வேறு வேலை செய்து பிழைக்க முடியாதவர்களும் தான் வயுற்றுப் பிழைப்பை உத்தேசித்து ஜெயிலுக்கு போனார்கள்" என்று சொல்லுவதற்கும் இடம் வைத்துக்கொள்ளுவார்கள்.

இவ்வளவும் தாண்டி நாட்டில் சத்தியாக்கிரகத்திற்கோ சட்ட மறுப்பிற்கோ ஏதாவது செல்வாக்கு (வராது) ஒரு சமயம் வந்து விடுமேயானால் அப்போதும் அதன் பலன் முழுவதையும் தாங்களே அடைவதற்கும் இடம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே பல விதத்திலும் காங்கிரஸ் வெளிப்படையான பித்தலாட்டத்தில் தான் இனி இருக்க முடியும் என்பது வெளியாய் விட்டது.

இந்தியாவில் தேசியப் போராட்டம் என்கின்ற ஏமாற்றமும் பித்தலாட்டமும் இனி யாராலும் மறைவாய் செய்ய முடியாது. ஏனெனில் இந்திய ஜனங்கள் ஒருவாறுமூடநம்பிக்கையிலிருந்தும்கண்மூடித்தனமாய்யாரையும் பின்பற்றுவதிலிருந்தும் விடுதலை அடையஆரம்பித்து விட்டார்கள். மனிதனுடைய லட்சியம் எனப்படும்அர்த்தமும்பலனுமற்றவார்த்தைகளானமோட்சமென்பதும் சுயராஜ்ஜியம் என்பதும் ஏமாற்றம் என்கின்ற ஒரேஅஸ்திவாரத்தின் மீது தான் கட்டப்பட்டிருக்கின்றது. மோட்சத்திற்கு இதுவரை அர்த்தம் விளங்காவிட்டாலும் அதன் பேரால் வயிறு வளர்ப்பவர்களை மக்கள் நம்பி பின்பற்றி அதற்காகஎப்படி கஷ்டப்பட்டுநஷ்டமடைந்து வந்தார்களோ அதுபோலவே தான் சுயராஜியம்தேசியம்என்பதற்கும் விடுதலை என்பதற்கும் அர்த்தம் விளங்காமலும் பலன் இன்னதென அறியாமலும் அதன் பேரால் வயிறு வளர்க்கும் வாழும் கூட்டத்தாரை மூடநம்பிக்கையால் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றி இதுவரை வீண் கஷ்டமும் நஷ்டமும்அடைந்து வந்தார்கள். ஆனால் இப்போதுமூடநம்பிக்கையும் கண்மூடித்தனமும் ஒழிய ஆரம்பித்து விட்டதால் இனி அது பலியாது என்பது முடிவான காரியமேயாகும்.

உண்மையாய் அறிவுடன் இருந்து பேசுவோமேயானால் நமதுநாட்டில் இந்தமாதிரிதேசியக்கிளர்ச்சி என்கின்ற ஒரு புரட்டு ஏற்படாமலிருந்து இருக்குமானால் நம்முடைய நாட்டு நிலைமை இவ்வளவு கேவலமாக இருந்திருக்கவே முடியாது. தேசியகிளர்ச்சி புரட்டானது மக்களின் உண்மையான தேச நன்மை சமூக நன்மை ஆகிய விஷயங்களில் உள்ள பகுத்தறிவை பாழ்படுத்தி விட்டது. அதன் காரணமே கேட்ட வரியை கொடுத்து விட்டு கண்ட அதிகாரிகளுக்கு கீழ்ப்படவேண்டியமிருகத்தன்மை ஏற்பட்டு விட்டது. இதற்கு உளவாளியாய்இருந்துவந்தது "நமது தேசியக் கிளர்ச்சி"யே யாகும்.

நல்ல சம்பவமாய் இந்த வருஷம்நமதுநாட்டில் ஒருவாறு தேசியக்கிளர்ச்சி என்னும் காங்கிரஸ் முதலியஸ்தாபனங்கள் அடியோடு மறைய இருந்ததானது சிலர்சூட்சியினால் மறுபடியும் கொஞ்ச காலத்திற்கு தொல்லை இருக்கும்படி ஏற்பட்டுவிட்டது "குடியேற்ற நாட்டு அந்தஸ்தை" ஒப்புக் கொண்டு "வட்ட மேஜை மகாநாட்டுக்கு போவது" என்பதையும் ஒப்புக் கொண்டிருந்தால் அவ்வளவுடன் காங்கிரசு தீர்ந்தது. ஏனெனில் உலகில் உள்ள மற்ற அரசியல் சமூக இயல் ஸ்தாபனங்கள் எல்லாம் மேற்படி இரண்டையும் ஒப்புக் கொள்வதால் காங்கிரஸ் என்று ஒரு தனிஸ்தாபனத்திற்கு தனி யோக்கியதை இருக்க அவசிய மில்லாமல் போயிருக்கும். அதனாலேயே புதிய வழி கண்டுபிடித்து பூரண சுயேச்சை என்கின்ற புரட்டைக் கொண்டு காங்கிரசை நிலை நிறுத்தக் கருதி இந்தசூட்சி செய்தார்கள். என்றாலும் இனி அது செத்த பாம்பு ஆட்டுவதுபோல தானே ஒழிய நாட்டில் அதை மதிப்பதற்கு சிலர் கூட இல்லை என்பது வெளிப்படை. மற்றபடிசத்தியாக்கிரகமும் சட்ட மீறுதலும் அதற்கு உபகருவியாய் வந்ததற்குக் காரணம் திரு. காந்தி நிலைக்கவேண்டுமானால் அதற்கும் ஏதாவதுஒருவழி கண்டுபிடிக்க வேண்டியதாய்விட்டது. அதுதான் சட்டமறுப்பு சத்தியாக்கிரகம் என்பவைகள். ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் இவைகளை சண்டித்தனமென்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் சட்ட மறுப்புக்கு நாடு தயாரில்லை என்றும் சத்தியாக்கிரகத்திற்கு மக்கள் தயாரில்லையென்றும் ஒப்புக்கொண்டதுடன் ஒரு தடவை செய்து பார்த்து தோல்வி அடைந்ததையும் ஒப்புக்கொண்டபிறகு மறுபடியும் சட்ட மறுப்பு சத்தியாக்கிரகம் என்றால் அதில் ஏதாவது பொருளோ நாணயமோ இருக்க முடியுமா? இவை எதற்காக செய்வது என்பதாவது சரிவர முடிவு செய்யப்பட்டதா? ஒன்றுமில்லாமல் இம்மாதிரி கிளர்ச்சி செய்வதின் கருத்து ஒன்று சண்டித் தனமாக இருக்க வேண்டும். அல்லது திரு. காந்தி அவர்களுக்கு "நமக்கு இந்த தகராரே வேண்டாம். போய் ஜெயிலில் சௌக்கியமாய் உட்கார்ந்துகொண்டிருக்கலாம்" என்கின்றசுயநலமாவது இருக்கவேண்டும். இது இரண்டில் ஒன்று இல்லாமல் வேறு ஒன்றும் இருக்க இடமில்லைஎன்பதே நமது அபிப்பிராயம். அன்றியும் சாத்வீக சட்ட மருப்பு என்பதற்கு போடப்படும் திட்டங்களும்

சர்க்காருக்கு ஏதாவது ஒரு வழியில் தொந்திரவு கொடுப்பதின் மூலம் விளம்பரம் ஏற்படவேண்டும்என்கின்ற ‥போல் இருக்கின்றதே தவிரஜனங்களுக்கு கஷ்டம் நீங்குவதற்கு என்கின்ற முறையில் எந்தத் திட்டமும் போடப்படுவதாய். இதுவரையில் எந்த சேதியும் வெளிவரவில்லே, தவிர "சாத்வீகத்தில் நம்பிக்கையுள்ளவர்களும் காங்கிரசில் இருப்பதால் அவர்கள் இஷ்டப்படி செய்ய காங்கிரஸ் இடங் கொடுக்கின்றது." என்பதாகக் காரியக் கமிட்டித் தீர்மானித்திருப்பதாய் தெரிகின்றது' இந்த சமயத்தில் காங்கிரசில் சாத்வீகத்தில் நம்பிக்கை யில்லாதவர்களுக்கு வேலே என்ன என்பது வாசகர்களே யோசித்துப பார்க்க வேண்டிய காரியமாகும்.

சாத்வீகத்தில் மக்களுக்கு அல்லது காங்கிரசிலிருப்பவர்களுக்கு நம்பிக்கை இல்லே என்று தெரிந்த பிறகும் சாத்வீக சட்டமறுப்புக்கு காங்கிரஸ் எப்படி உத்திரவு கொடுக்கலாம்? நிற்க காங்கிரசானது சாத்வீக சட்டமருப்பை திரு காந்தியார் சொந்த சொத்தாக விட்டிருப்பதாயும் தெரிகின்றது. திரு காந்தி அவர்களுக்கு நமது மாகாணத்தைப் பொருத்தவரை திரு ராஜாகோபாலாச்சாரியும்கதர் இயக்கத்தின் மூலம் ஜீவனம் நடத்தும் பார்ப்பனர்களும் தான் மந்திரிகளும் சிஷ்யர்களுமாய் இருக்கின்றார்கள். இந்த நிலேயில தமிழ் நாட்டுத் தொண்டர்கள் நடந்து கொள்ள வேண்டிய விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டியவர்களாவார்கள். அவர்கள் சிரை செல்லுவதையாவது தியாகம் செய்து கஷ்ட நஷ்டங்களே அனுபவிப்பதையாவது நாம் தடுக்க வரவில்லே. இந்த இரண்டுதான் நமது இயக்கத்திற்கும் ஆதாரமே ஒழிய அதிகாரமோ பதவியோ அல்ல என்பதை நாம் நன்ருய் உணர்ந்திருக்கிறேம். ஆனல் அவைகளே பலனுள்ள காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டும என்று தான் சொல்லுகின்றேம். ஜாதிகளே அழிக்க கோவிலே ஒழிக்க உற்சவங்களே தடுக்க மற்றும் மக்களுக்கு செலவைக் கொடுப்பதும் அறிவைக் கெடுப்பதும் இழிவைத்தருவது 'மான காரியங்களே ஒழித்தல் முதலாகிய ஏதாவது காரியங்களுக்கு நாம் சிறை செல்வதையோ அடிபடுவதையோ இறப்பதையோ அனுபவிக்கத்துணிவதை கடமையான காரியமென்றே சொல்லுவோம். அப்படிக்கில்லாமல் வீணன காரியங்களில் "உப்பளங்களே முற்றுகை போடுவது" என்கிற அர்த்தமற்றதும் பைத்தியக்காரத்தனமானதுமான காரியங்களில் தலேயிட்டு நமது ஆற்றல்களே எல்லாம் வீணுய் செலவழித்துவிடக் கூடாது என்பதுடன் இது தமிழ் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாத தொண்டர்களுக்கு இது சமயம் இருக்கும் ஊக்கத்தையும் ஆற்றலேயும் ஒருவாறு மாற்றி அவைகளே வேறு வழிகளில் திருப்பி வீணுக்கவே திரு. காந்தியின் "தமிழ் நாடு" சிஷ்யர்கள் செய்த சூழ்ச்சியாய் இருக்கக்கூடும் என்று தொண்டர்களுக்கு ஞாபக மூட்டுகிறேம்.

## ஸ்தல ஸ்தாபனங்களில் அதிகாரிகளின் முட்டுக் கட்டை.

### ராமனதபுரம் ஜில்லா போர்டு மீட்டிங்.

15-2-30-ல் ராமனதபுரம் ஜில்லா லா போர்டு மீட்டிங் ஒன்று [ராஜபாளேயத்தில்] போாடு ஹைஸ்கூலில் தலேவர் சௌந்திரபாண்டியன் அக்கிராசனத்தில் கூடிற்று. பல சாதாரண விஷயங்கள் பாசான பின்பு அருப்புக்கோட்டை யூனியனுக்கு போர்டின் அனுமதியை எதிர்பார்த்து கடனகக் கொடுக்கப்பட்ட 2000ரூ விஷயத்தில் ஒரு மெம்பரான கலெக்டர் திரு. பி. மெக்வீன் அவர்கள் தலேவர்மீது ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து பிரேரேபித்தார். பிறகு தலேவர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் ஜில்லாவின், ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தின் நன்மையைக்கோரியும் அருப்புக்கோட்டை யூனியனின் வேண்டுகோளே மதித்தும். அந்தப்படி செய்யவேண்டியது அவசியமெனக் கருதிச் செய்ததாக விளக்கிக் காட்டினர். இதை அனுசரித்து அநேக மெம்பாகள் தலேவரை ஆதரித்தும் பேசியதுடன் தலேவருக்குச் சில முக்கிய காரியங்களில் இவ்வித அதிகாரம இருக்கவேண்டியது அவசியம் என்றும், இதை ஆட்சேபிப்பது சரியல்லவென்றும் சொல்லி தீரமானத்தை வாபீஸ் வாங்கிக் கொள்ளும்படியாக கலெக்டருக்குச் சொன்னர்கள். கலெக்டர் திரு. மெக்வீன் இதை ஒப்புக்கொள்ளாமல் பிடிவாதமாகத் தனது தீர்மானத்தை வலியுறுத்தினதால் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு: தீர்மானத்திற்கு சாதகமாக இரண்டே இரண்டு பேர் ஓட்டுக் கொடுத்தாலும் மற்றவர்கள். விரோதமாக ஓட்டுக் கொடுத்தாலும் கலெக்டரின் கண்டனத் தீர்மானம் தோல்வியடைந்தது. பிறகு 2000 ரூ. கடன் கொடுத்ததை சபை அனுமதிக்கவேண்டிய தீர்மானம் நிறைவேறிற்று. பிறகு எஸ்டிமேட்டுகளும் சல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு இரவு 9-30 மணிக்கு கூட்டம் கலேந்தது.

## கோவில்களுக்கு ஆபத்து

ருஷியாவில் கடவுள்களுக்கு எதிராக பிரசாரம் செய்யும் இயக்கமானதுசென்ற வருஷத்தில் மிக்கபாராட்டத்தக்க வேலே செய்து வெற்றி பெற்று அநேக கோவில்களே மூடிவிட்டதுடன் சில கோவில்களே தொழிற்சாலேகளாகவும் பள்ளிக்கூடமாகவும் வாசகசாலேயாகவும் தானிய பண்டகசாலேயாகவும் மாற்றிவிட்டார்கள் என்று ராய்ட்டர் தந்தி கூறுகிறது.

---

## அபீல்

ஈரோடு ஆலயப் பிரவேச வழக்கு தீர்ப்பின்மீது ஈரோடு சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டிடம் அபீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. விசாரணே வாய்தா 5-3-30 க்கு போடப்பட்டிருக்கின்றது.

---

## இராமநாதபுரம் ஜில்லா ரூ போர்ட் பில் கலக்டர்கள் மேஸ்திரிகள் மகாநாடு.

9-2-30-தேதி மாலே சிவகங்கை கோக்கலே ஆலில் உயர்திரு டி. புஷோத்தம் அவர்கள் தலேமையில் கூடியது.

தலேவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தபின், ராஜப்பிரதிநிதியைப்பாராட்டியும் யூனியன் பில் கலக்டர்களேயும் மேஸ்திரிகளேயும் சுப்பீரியர்சர்வீசாயும் பென்ஷன் அல்லதுபிராவிடெண்ட் சிப்பந்திகளாகவும்சேர்க்கவும்எல்லா யூனியன்களிலும் ஒரேமாதிரி சம்பளமாக மீ. 20 முதல் 30 வரையில் உயர்த்தப்படவும் 10 வருஷ சர்விசுக்கு மேற்பட்டவர்களுக்கு கிராட்டியூட்டி கொடுக்கவேண்டியும் சிப்பந்திகளுக்கும் இரண்டு அபீலுக்கு இடமேற்படவும் வீட்டு வாடகை அலவுன்ஸ் மாதம் 3 ரூபாய் கொடுக்கவும் கான்பரன்சுக்கு வருஷா வருஷம் லோக்கல் போர்ட்டு நன்கொடை கொடுக்கவும் சர்வீசை அனுசரித்து தங்களுக்கு கிளர்க்கு வேலே கொடுக்கவும் கோரி பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

---

## கோயமுத்தூர் ஜில்லா போர்ட்வைஸ்பிரசிடெண்டு

கோவை பிரபல வியாபாரியும் சென்னே தாசே கவுண்டர் அண்கோ புரொப்டைட்டரும் பியர்ஸ்லெஸ்லி கம்பெனி கம்போடியாமில் ஜெனரல் ஹோல் சோல் ஏஜெண்டும் முனிசிபல் கவுன்சிலரும் தேவஸ்தான கமிட்டி மெம்பருமான திரு. எஸ். என். பொன்னேயா கவுண்டர் அவர்கள் இரண்டாவது தடவையாக கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்கு வைஸ் பிரசிடெண்டாக ஊத்துக்குளி குமாரராஜா அவர்களால் பிரரேபிக்கப்பட்டு பளேய கோட்டை பட்டக்காரர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு சமத்தூர் ஜமீன்தார் அவர்களால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதாய் தெரிந் தெடுக்கப்பட்டார்.

## அடுத்தவாரம். வெளிவரும்

நிஜசிருங்கேரி மடம் "ஸ்ரீஜெகத்குரு சங்கராச்சாரி சுவாமிஸ்ரீமுகம்" அடுத்தவாரம் வெளிவரும்.

---

## உதிர்ந்த மலர்கள்.

1. உரிமைபெற உயிரைவிடு.
2. விதியும் கடவுளும் ஒழிந்தாலன்றி விடுதலேயில்லே.
3. குருட்டு நம்பிக்கையையும் மூடப் பழக்க வழக்கங்களேயும் விரட்டி அடி.
4. 20 வயத்துக்குகீழ்ப்பட்ட விதவைகள் ஒன்றேமுக்கால் கோடி பேர்கள் வாழும் நாட்டில் எப்படி. கற்பு இருக்கமுடியும்.
5. கல்வி குறைந்த தமிழ்நாடு இகழ்கம்பன் பிறந்த தமிழ்நாடு பல்விதமான சாஸ்திரத்தின் ஆபாசம் பாரெங்கும்காணும்தமிழ்நாடு.

---

## ஓர் நற்செய்தி

சுக்கில ஆண்டு தைத்திங்கள் 15 ம் நாள் வல்லம் க. அரங்கசாமி அவர்கள் மனேவி திருமதி செல்லம்மாளுக்கு பெண் ஆண் இரு குழந்தைகள் பிறந்து 16 ம் நாள் நலமாக வீட்டுக் கழைக்கப்பட்டு குழவிகள் இருவருக்கும் மங்கையர்கரசி மாணிக்கவாசன் எனத் திருப்பெயரிடப்பட்டது. குடி அரசிற்கு நன் கொடையாக ரூ. 5 மணியாடருக அனுப்பப் பட்டிருக்கிறது. இங்ஙனம் தங்கள்,

வ. க. அரங்கசாமி
குளிச்சப்பட்டு, தஞ்சை.

---


## கோபி தாலூக்கா போர்டு

கோபி செட்டிபாளேயம் தாலூக்கா போர்டில் மெம்பர்களுக்குள் ஏற்பட்ட கட்சி பிரதிகட்சி காரணமாக அரசாங்கத்தார் அந்த போர்டை ஏன் கலேக்கக் கூடாது என்று டிதாலூக்கா போர்டையும் கோயமுத்தூர் ஜில்லாபோர்டையும் கேட்டிருந்தார்கள் அதற்கு பதிலாக மேற்படி இரண்டு போர்டுகளும் கலேத்து விடலாம் என்று தீர்மானித்து விட்டன. இரு கட்சியாரும் தங்களுக்குள் சமரசமாய்ப் போய் விட்டால் கலேக்க வேண்டிய அவசியமில்லே என்பதாக அரசாங்கத்தார் கருதி இருப்பதாகத் தெரிகின்றது. கோவை நிருபர்.

---

## சைவபரிபாலன 10 வது ஆண்டு விழா

மேல்கற்கொண்டார் கோட்டை சைவபரிபாலனத்தின்10வது ஆண்டுதொடக்கவிழாமார்ச்சுமாதம் 2 ந்தேதி அவ்வூர் போர்ட் பாடசாலேயில் நடைபெறும் திரு. ஈ. வெ. ராமசாமியார் அழைக்கப்படிருப்பதால்விஜயம் செய்வார்.



பினங்கு இந்திய சங்கத்தில் ஜனுப் முதலாளி முகமது ராவுத்தர் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் திரு. ஈ. வெ. ராமசாமியாருக்கு உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்படும் காட்சி.



சிரம்பானில் ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் சிவா அவர்கள் வீட்டில் எடுத்த காட்சி உட்கார்ந்திருப்பவர்கள்:—திருமதி சிவ, திருமதி நாகம்மை, திருமதி சிவாவின் குழந்தை திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமியார், எஸ். ராமனுதன், ஆறுமுகம், திரு. நாகம்மைக்கும் ராமசாமியாருக்கும் இடையில் பின்புறம் நிற்பவர் திரு. சிவா.

# சிரைகாத்தையனார் கோவிலின் திருவிளையாடல்

—(0)—

## பூசாரிகளின் சூழ்ச்சியும் அதன் வீழ்ச்சிகளும்

—0—

திருத்துரைப் பூண்டி A. G. R. வரைவது.

—O—

தஞ்சாவூரில் தஞ்சையிலிருந்து கும்பகோணம் போகும் ரோட்டில் முனிசிபல் டோல் கேட்டுக்கு சமீபத்திலிருக்கும் [அதாவது பள்ளியக்கிரகாரத்திற்கும் அருகில்] சிரைகாத்தையனார்கோவில் ஒன்று உள்ளது. அதில் அய்யனார் காமாட்சி சங்கிலிக் கருப்புகாட்டேரி வீரன் இன்னும் பல தெய்வங்களுண்டு இத்தெய்வங்களுக்கு ஆட்டுக்கிடா வெட்டி பூசைகள் போடுவதும் குல தெய்வங்களென்று கொண்டாடுவதும் பழக்க வழக்கமாயிருக்கிறது.

எங்கள் பந்துக்கள் ஒருவர் வீட்டில் காதுகுத்துவதென்று தெரிவித்தார்கள். அதற்கு நானும் என் நண்பர்களும் ஆங்கு சென்ற வாரம் சென்றிருந்தோம். அக்கோவிலில் கல்லினால் செய்யப்பட்ட சிலைகளும் மரத்தினால் செய்து சாயம் பூசின பெருஞ்சிறும் பொம்மைகளும் உள்ளிருந்தன. மண்ணினால் செய்யப்பட்ட பெரிய யானைகளும், குதிரைகளும் வெளியிலிருந்தன

அதற்கு பிற்பாடு சில பொம்மைகளுக்கு கற்பூரத்தினால் தீவாராதனை செய்து பிறகு ஆடுகள் நான்கையும் சன்னதியின் எதிரில் நிறுத்தி சந்தனம், பூ இலைவகள் போட்டு பூசாரி [என்கிற சண்டாளன், பாபி] ஒரு பெரிய அறுவாளைக் கொண்டு துடிதுடிக்க மூன்று ஆடுகளையும் துண்டித்தார். பிறகு நான்காவது ஆட்டை வெட்டினார். அந்த ஆட்டின் தலை ஒரே வெட்டில் விழாமல் தொங்கிவிட்டது. அதற்கு பூசாரி பூசை போடுகிறவர்களைப் பார்த்து சுவாமிக்கு ஏதோ குறை செய்திருக்கிறீர்கள் அதனால் தான் தலை தொங்கி விட்டது என்று மழுப்பிவிட்டார்.

ஈவு இரக்க மற்ற எழில். பெரும் பாவிகளாகிய இப்பூசாரியின் சூழ்சசி தான் என்னே. இப்படியும் சுவாமிக்கு போலி வேஷம் போட்டு தொண்டூழியம் செய்யும் இப்பெரும் பாவி ஜீவஇம்சை செய்து வயிர் வளர்க்கலாமா?

அப்பப்பா! என்ன அக்கிரமம் என்ன அனியாயம்! அந்த முண்டங்கள் துடிதுடித்துக்கொண்டிருந்தன. அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

அம்மம்மா இக்கடவுளுக்கு ஆடுதான் வேண்டியிருக்கிறதாம். ஆடுகள் வெட்டாவிட்டால் கடவுளுக்கு குறை வந்து விடுமாம். பூசைகளை ஏற்காதாம். இதுவும் ஒரு கடவுளா? இக்கடவுளையும் தெய்வமென்று கும்பிடுகிறார்களே? அனியாயம்! அனியாயம்! என்னே இவர்கள் புத்தி.

இன்றும் இக்கடவுள் தலைமயிர் கேட்கிறதாம். கொடா விட்டால் பூசைகளை ஏற்காமல் பூசைகள் போடுகிறவர்களைக் கஷ்டப்படுத்துமாம். அதனால் நம் சகோதரர்கள் முன்னோர்கள் செய்த மூட பழக்க வழக்கங்களை அனுசரித்து இக்கடவுளுக்கு மயிரை கொடுத்து விட்டு வருகிறார்கள். அதனால் இக்கடவுளின் நோக்கந்தானென்னே!

மரக்கட்டையினால் வர்ணம் பூசின பொம்மைகளை வைத்துக்கொண்டு அதன் பேரில் வயிர் வளர்க்க காசு பறிக்கும் இம்மாய பூசாரியின் வலையில் அகப்பட்டுத் திரியும் நம் சகோதர சகோதரிகளை என்னென்று சொல்வது.

அதன் பிறகு இரவு 7 மணி சுமாருக்கு படையல் போட்டார்கள் அப்பொழுது அந்த வேஷப் பூசாரி சாமி வந்ததாக பாவனை செய்து இடுப்பில் மாட்டு மணியும் காலில் நாய் சலங்கையும் கட்டிக்கொண்டு ஆடினார் பாடினார் பிறகு பெரும் அறிவாளைக் கொண்டுவரச்சொல்லி அறிவாளை இரண்டு பருத்த மனிதர்களை ஒவ்வொரு பக்கமும் பிடித்துக்கொள்ளச் சொல்லி உடனே அந்த ஜாலப் பூசாரி அறிவாளைப் பிடித்திருக்கும் ஆட்களின் தலைகளை பிடித்துக்கொண்டு தன் ஒரு காலை மழுங்கலாயிருக்கும் கைப்பிடிக்கு பக்கத்திலும் மற்றொரு காலை கூராயிருக்கும் பக்கத்தில் மெதுவாக காலைவைத்துக்கொண்டும் தன்னுடைய பாரத்தை யெல்லாம் அம்மனிதர்களின் தலையில் தாங்கிக்கொண்டும் அடிக்கடி கால் வலியினால் பாதங்களை நகத்தி வைத்துக் கொண்டும் ஏதேதோ பிதற்றினார்.

பிறகு ஆட்டுக்குட்டியின் இரத்தம் கேட்டார் ஆங்குள்ளோர் அதற்காக ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஒரு சிறு ஆட்டுக்குட்டியை அறுத்து இரத்தத்தைக் கொடுத்தார்கள் அந்த இரத்தத்தை பூசாரிகுடித்தார்.

இதை விளக்குவோம்:—கடவுள் ஆவேசம் வந்த பூசாரி. அறிவாளில் ஏறுவது எதற்காக?

அறிவாளின் மீது ஏறுவிட்டால் இப்பூசாரிக்கு சாமி வரவில்லை என்று நம் சகோதரர்கள் நினைப்பார்களா? நம் சகோதரர்களும், சகோதரிகளும் நம்புவதற்காகத்தானே அறுவாளில் ஏறியும், இரத்தத்தையும் குடித்தார் நமக்கு சுவாமி வந்திருக்கிறது என்று ஜனங்கள் நினைக்கட்டும் என்கிற சூழ்சசி தானே? இப்பூசாரிக்குமேற் எந்த கொள்கையோடு அறுவாளில் எறியிருக்கக்கூடும் இரத்தம் சாபபிடுவதும் எந்த கொள்கையோடு சாப்பிட்டிருக்கக்கூடும் இரத்தம் சாப்பிடத்தான் வேண்டுமா? இக்கடவுளுக்கு. அதுவுமல்லாமல் சிறு ஆட்டுக்குட்டியின் இரத்தம் தான் குடிக்குமாம், பெரிய ஆட்டின் இரத்தம் குடிக்காதாம் என்னே இப்பூசாரியின் சூழ்ச்சிகளையும் மாய, ஜால, தந்திரங்களையும் பாருங்கள்,

பெரிய ஆட்டினுடைய இரத்தம் ஜாஸ்தியாயிருப்பதால் குடிப்பதற்கு கஷ்டமாயிருக்குமாம் சின்ன குட்டியின் இரத்தம்கொஞ்சமாயிருப்பதால் தான் இம்மாயப்பூசாரி சிறு குட்டியின் இரத்தம் வேண்டுமென்று சொல்லுகிறார் போலும்.

இச்சாமி வந்த பூசாரிக்கு மாட்டு மணியும் நாய் சலங்கையும் அணிகலமா? இதை அணிந்து கொண்டால் தான் சுவாமி என்று நினைப்பார்களா

அப்பப்பா இப்பூசாரிகள் செய்யும் அனியாயங்களும், அக்கிரமங்களும், பிறரை ஏமாற்ற ஜாலங்களை வைத்துக் கொண்டு வயிர் வளர்க்கிறார்கள்.

மாயமென்றும் மந்திரமென்றும், குறி சொல்லும் மாயப்பூசாரிகளை, கல்லையும் மரக் கட்டையையும் மண்ணையும் கடவுளென்று சொல்ல மயங்குத் நம் சகோதர சகோதரிகளே இவ்வாபாசங்களை நன்கு ஆராய்ந்து பாருங்கள் இப்படியும் ஆடுகள் கேட்கும் ஒரு கடவுளிருக்குமா? அதுவும்ஒருகடவுளா ஆதிகடவுள் நம்மக்களைரட்சிக்க ஏற்பட்டாரா அல்லது நம்மக்களிடம் லஞ்சம் வாங்கி சாப்பிடுவதற்காக ஏற்பட்டாரா உங்கள் சிந்தனை சக்தியை பிரயோகித்துப் பாருங்கள்.

கடவுள் இல்லையெனபிரசங்கம்செய்வதாய் சொல்லப்படும் நம் சுயமரியாதைத் தலைவர் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரை நிந்திக்கும் கனவான்களே, குணவான்களே நம் பெரியார் சொல்வதில், ஏதாவது பொய் இருக்கின்றதா? என்று யோசித்துப்பாருங்கள் நம் பெரியார் மனிதர்கள் மனப் போக்கின்படி கற்பனையாய் யெழுதி வைககப்பட்ட போலிப் புராணங்களையும், சாஸ்திரங்களையும் நம்பி அவைகளில் கூறப்பட்டவைகளே கடவுள் அதிலுள்ள அண்டப்புழுகும் ஆகாசப்புழுகும் ஆபாசங்களும் அதன் அற்புதங்களென்று கூறுவதை நீங்கள் நம்ப வேண்டாமென்று தான் நம் பெரியார் சொல்லுகிறார்களே தவிர வேறு ஒன்ன சொல்லுகிறார்

நம் இந்திய மக்களை இனி மேலாவது ஆடுகளை சுவாமிகளின் பேரால் ஈவு இரக்கமில்லாமல் சித்திரவதை செய்யாமலும் மூடபழக்கவழக்கங்களை அனுசரிக்காமலிருக்கும்படி நம் சுயமரியாதை சூரியன் காப்பாற்றுவாராக.

---

**மேயோ கூற்று**

**மெய்யா—பொய்யா!**

**விலை அணா 4.**

**சி. எ. அய்யாமுத்து.**

**புஞ்சைப் புளியம்பட்டி,**

**கோயமுத்தூர் ஜில்லா.**

---

## தென் இந்திய ஆதிதிராவிட மகாஜன சமாஜம் திருநெல்வேலி ஜில்லா மகாநாடு

15—1—30 தேதி தென் இந்திய ஆதிதிராவிட வைதீக மகா ஜன சமாஜத்தினுதாவில் திருவாளர் கி. சு. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் ஒருமகாநாடு கூடி அடியில் கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன. ராஜப்பிரதிநிதியைப் பாராட்டியும், வெடிகுண்டு போட்ட செய்கையைக் கண்டித்தும். தீண்டாமை விலகு முன்பு சுயராஜ்யமும் பூரண சுயேச்சையையும் கேட்பதை கண்டித்தும், தீண்டாமை பாராட்டுபவர்களை தண்டிக்க சட்டம் செய்யும்படியும், நிர்மணத்திட்டம் ஏற்பாடு செய்ய கமிட்டி நியமிக்கப்பட்டு 1930 வருஷம் டிசம்பருக்குள் எல்லா கள்ளு சாராயக்கடைகளை மூடும்படிக்கும், அதன் வருமானக் குறைவுக்கு ஈடு செய்ய வெளிநாட்டுத் துணி மோட்டார் முதலிய சாமான்களுக்கு வரி இரட்டிப்பாய் போடும் படிக்கும், பள்ளிக்கூடங்களை அரசாங்கத்தாரே மேல்பார்வை செய்யவேண்டுமென்றும், அவைகளை மதசம்பந்தமான உணர்ச்சி உள்ளவர்களிடம் ஒப்புவிக்கக்கூடா தென்றும், அரசாங்க உத்தியோகங்களில் 100க்கு 26 வீதமும் பேசலீசில் 100க்கு 75 வீதமும் ஆதிதிராவிடர்களுக்கு உத்தியோகம் கொடுத்தாக வேண்டும் என்றும்

விவசாயத்தில் வரும் லாபத்தில் 3ல் 1வீதமாவது பயிர் தொழில் செய்பவர்களுக்கு கிடைக்கும் படியும்

சென்னை நிர்வாக சபையில் காலி இருக்கும்-ஸ்தானத்தை ஒரு ஆதிதிராவிடருக்குக் கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

---

## விளம்பரம்.

1930 வருஷம் பிப்ரவரி மாதம் 2-ந் தேதி வெள்ளிக்கிழமை பகல் 2 மணிக்கு காரமடை பங்களாவில், 7-3-30 ந் தேதி முதல் 16-3-1930 ந் தேதி வரை நடக்கப்போகும் காரமடை ஸ்ரீ ரங்கநாதர் ரதோர்ச்சவ காலங்களில் தாலுக்கா போர்டுக்குச்சேர்ந்த ஜாகாக்களில் கடைகள் வகையறா வைக்கும் சுதந்திரத்தை கோயமுத்தூர் தாலுக்காபோர்டு பிரசிடெண்டு அவர்களாலோ அல்லது அவர்களின் அதிகாரம் பெற்றவர்களாலோ ஏல நிபந்தனைகளின்படி ஏலம் விடப்படும்.

2. ஏல நிபந்தனை ஜாப்தா கோயமுத்தூர் தாலூக்காப்போர்டு ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| | ஒப்பம், |
| கோயமுத்தூர் தாலூக்காப் போர்டு ஆபீஸ் 11-2-1930 | வே. சி. பழனிசாமி பிரசிடெண்டு, தாலூக்கா போர்டு. |

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ய தூதனென இராவணனிடம் கூறினுன் என்ற போது இது அவனுடைய வஞ்ச உரை என்று கூறினேம். அதனாலே திரு சீனிவாசய்யங்காரும் பக்கம் 220 ல் "சுக்கிரீவன் இராவணனுக்கு மாருதியின் மூலமாக யாதொரு வார்த்தையும் சொல்லியனுப்பினதாக கிட்கிந்தா காண்டத்தில் கிடையாது" என்று எழுதுகிருர். இதனுல் ஆனுமான் மிகத்தீய வஞ்சகன் என்பதை அவரும் ஒப்பியவரேயாவர்.

சீதை ஒரு சிறு கந்தையை உடுத்தியிருந்தாளேனும் பெரும்பாலும் ஆடையற்றவள் போலவே இருந்திருக்கிறுள் அவளை அனுமான் கவனித்தான் என்று நாம் முன்னர் விளக்கிய உண்மையையே திரும்பவும் இங்கே அனுமான் கூற்றிலேயே ஏற்றி வால்மீகி கூறுகிருர். இல்லையாயின் அவள் இராவனைக் கண்டபோது துடைகளை நெருக்கி கொங்கைகளைக் கையால் மறைக்கவேண்டியஅவசியமே இல்லை. அனுமானேடு பேசும்போதும் அவ்விதமாகவே அவள் இருந்திருக்கவேண்டும்.

இந்நிலையினளாகிய சீதையைத் தொட்டெடுத்து வந்தான் இராவணன். அவ்வாறு கூறுமிடத்து அனுமான் மூலமாக இராவணனுடைய பெருமையை வால்மீகிவிளக்குகிருர். அவைகளை மறுபடியும் படிக்க நண்பரை வேண்டுகிறேம். இராவணன் அளவில்லாத தத்துவத்தையும் புகழையும் ஒளியையும் ஆற்றலையும் உடையவனுதலால் சீதையின் சாபங்கள் அம்மகானுபாவனைச் சேர மாட்டா என்று அனுமான் கூறினுன், இதனுல் தனது தங்கையை அவமானம் செய்த இராமனது மனைவியை பிறந்த கோலத்தோடு வைத்துப் பலவாறு இராவணன் தன் மனம்போனவாறு நடத்தினன் என்பது வெளியாகிற்று. சீதையும் இராமனிடம் கூறும் போது தன் உடல் இராவணனுடைய வசத்தில் இருந்தாலும் மனம் மட்டும் இராமன் வசமே இருந்ததெனக்கூறிய செய்தி அவளுடைய கற்பிழந்த செய்தியின் உண்மையை விளக்கும். மற்றும் இது பற்றி உள்ள உண்மையான செய்திகளை யெல்லாம் பிற்காலத்தார் மாற்றியிருத்தல்வேண்டும். இராவணன் மனிதர்களைத் தவிரப் பிறரால் சாவு கிடையாதென வரம் பெற்றவன் ஆதலால் அனுமான் அவனிடம் "சுக்கிரீவன் நீ சாவில்லாமலிருக்குமாறு வரம் பெற்றவர்களில் ஒருவனும் அல்லன்" என்று கூறுகிருன். [சுருக்கம் 51] [இது செய்தி கட்டுரை 13-ல் சேரவேண்டியது.] அதனுல் அவன் மனிதனுகவே இருக்கவேண்டும். இவ் வுண்மையை நாம் முன் பலஇடங்களில்விரித்தோம். இவ்விடத்தில்மொழிபேயர்ப்பாளர் திருநரசிம்மாச்சாரியார்பக்கம் 234,5 ல் குறிப்பாக "இராவணன் தேவாசுர இயக்க பன்னகாதிகளால் சாவில்லாதிருக்கும்படி பிர்மாவிடம் வரம் பெற்றுனன்றி மனுஷ்யாதிகள் மிகுதியும் ஈனர்களாகையால் அவர்களால் சாவில்லாமையை வேண்டவில்லை. சுக்கிரீவன், எவரால் இராவணன் சாவில்லாமைமையை வேண்டவில்லையோ, அப்படிப்பட்ட மனுஷ்யாதிகளிற் சேர்ந்தவனுகையால் இராவணனை, எதிர்க்கக் கூடுமென்று சொல்வதாகத் தெரிகிறது, என்று எழுதியிருக்கிருர். இதனுல் நமது உண்மைக் கூற்று வலியுற்று விளங்குகின்றமை காண்க. இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

அனுமானுடைய வாலில் பழைய துணிகளை அரக்கர் சுற்றினரென வால்மீகி கூற கம்பர் அரக்கரை இகழ எண்ணியே அவர்கள்தம் மனைவியர் தாலிக் கயிறு தவிர ஏனைய கயிறுகளையெல்லாம் கொண்டுவந்து கட்டினுர்கள் என்று கூறுகிருர்.

"அரண்மனையில் தீ பற்றியபோது ஒன்றும் செய்யாமல் வாளா இருந்தனரு? அதனுல் இது பொய்க்கதையே" என்று நாம் கூறிய கூற்றை எழுமென முன்னரே அறிந்த கம்பர் தாமொரு புதுக்கதை கட்டியிருக்கிருர். தீப்பிடித்தவுடன் இராவணன் புட்ப விமானத்தில் தன் மனைவியரோடும் எதிர்சென்று பின் அரக்கரை வினுவித் தீ பற்றிய காரணம் அறிந்து சினம் கொள்கின்றனனும். இத்துடன் நில்லாமல் கம்பர் மேலும் கதை கட்டுகிருர். இராவணன் ஏவலால் பல வீரர் அனுமனுடன் போரிட்டு மடிந்தனராம்! இவ்வாறு இவர் கதை கட்டுவதால் அனுமான் உயர்ந்தவனுய் விடுவானு? பொய் எத்தனை நாளைக்கு நிற்கும்? மெய் எப்படியாவது வெளிவந்தே தீரும். இனிமேற் சொல்லுதும்.

---

## ஒரு மாப்பிள்ளைக்கு இரண்டு பெண்கள் ஏககாலத்தில் விவாஹம்.

---

9—2—30 அபிராமம் சேகரம் அந்தரியேந்தல் கிராமம் சுவான் தாரும் வாலிப சங்கத்தின் அங்கத்தினருமான Land Lord திருவாளர் கோதண்ட ராமச்சந்திரன் மணமகனுகவும் திரு. வேலம்மாள் ஸ்ரீ ரெத்தினம் அம்மாள் மணமகள்களாகவும் நிச்சயித்து பெண்கிரஹகக் கலியாண மண்டபத்தில் மணமகனுக்கு வலது பக்கம் திரு வேலம்மாளையும் இடது பக்கம் திரு. ரெத்தினம்மாளையும் வைத்து விவாஹ முகூர்த்தம் மணமங்களமாகவும் வாலிபர் சங்கத்தின் வாழ்த்து பத்திரங்களின் மாரலாயும் தம்பதிகளின் ஆசிர்வாதத்தின்படியும் அதி விமரிசையாய் நடைபெற்லது.

சாரங்கபாணி, காரியதரிசி,
இந்து வாலிப சங்கம்
அபிராமம்.

---

## பரம்பையோன் பகர்வது.

---

1. அடுத்த ஜென்மம் என்பது—மூடிச்சுமாறிகள் பேச்சு.
2. ஆரியர் சூழ்ச்சி—அறிவு வீழ்ச்சி.
3. இதிகாசம் என்பது—மதிமோச விளக்கம்.
4. உண்மையைச் சொல்ல—ஒருபோதும் தயங்காதே
5. ஊழ் வினை என்பது—ஊக்கத்தைக்கெடுப்பது.
6. கருமாந்திரம் என்பது—காசுபறிக்கும் தந்திரம்.
7. கல்லை தெய்வமென்று—கற்பிக்கவேண்டாம்.
8. கோத்திரமென்பது—குலத்தை பிரிப்பது.
9. சனுதன தர்மம் என்டது—சண்டாள அதர்மம்
10. சாமி சாமி என்பது—காமிகளின் உளறல்
11. சூத்திரன் என்றுல்—எட்டி உதை.
12. திதி கொடுப்பது—நிதியைக்கெடுப்பது.
13. தெய்வ வழிபாடு—தேச மக்களுக்கு கேடு.
14. பல தெய்வ வணக்கம்—பட்டுவீழ்க.
15. பார்ப்பனர்கள் என்பவர்கள்—பகற் கொள்ளைக்காரர்கள்
16. புராணங்கள்—பொய்க்களஞ்சியங்கள்.
17. பேதகமென்பது—வேதியருக் கணிகலம்.
18. மகாபாரதம்—பஞ்சமா பாதகம்.
19. மடத்தலைவர்கள்—மடைத்தலைவர்கள்.
20. மதக்குறி என்பது—மடையர்க் குறிகுறி.
21. முத்தி முக்தி என்று—புத்தியை கெடுக்காதே.
22. விதி விதி என்பது—மதியைக்கெடுப்பது.
23. வேதம் என்பது—சூதாய்ச்சொன்னது.
24. ஜாதி வேறுபாடு—ஜனசமூகத்திற்கு கேடு.
25. க்ஷேத்திரமென்பது—சாத்திரப் புரட்டு.

---

## சுயமரியாதைச் சங்கத்திற்குக் கட்டடம்.

சேலம் செவ்வாய்ப் பேட்டை சுயமரியாதை இளைஞர் சங்கத்திற்கு ஒரு கட்டடம் கட்டுவதற்காக ஒரு நிலம் வாங்கப்பட்டதற்காக அடியில் கண்ட கனவான்கள் நன்கொடை அளித்திருக்கிருர்கள்.

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| R. S. முத்துசாமி செட்டி, அருணுஜல செட்டி | ரூ. | 100 |
| P. K. அருணுஜல செட்டியார் | ... | 100 |
| P. R. ரங்கசாமி செட்டி | ... | 100 |
| P. S. கந்தசாமி செட்டியார் | ... | 100 |
| R. நரசிம்ம செட்டி | ... | 100 |
| K. சிவபெருமாள் பிள்ளை | ... | 100 |
| S. ஜெகன்னுத செட்டி | ... | 100 |
| T. A. சித்தைய்ய செட்டி | ... | 100 |
| K. S. அருணுஜல செட்டி | ... | 100 |
| K. R. V. அர்த்தனுரி செட்டி | ... | 100 |
| ஆகமொத்தம் | ரூ. | 1000 |

மேல்கண்ட ஆயிரம் ரூபாய்களையும் வசூல் செய்து கிரயபத்திரம் எழுதியாய் விட்டது. இன்னும் மேல் கொண்டு கட்டடத்திற்கு ஆயிரம் ரூபாய் வரைக்கும் கையொப்பமாயிருக்கிறது. கட்டடம் கட்டி முடிய மேல்கொண்டு இன்னும் மூவாயிரத்திற்கு மேல் பிடிக்கும்போல் தெரிகிறது.

இவ்விஷயத்தில் திருவாளர்கள் மண்டி ஜெகன்னுதசெட்டியார் கவுன்சிலர் அருணுசலஞ் செட்டியார் பாங்கர் சித்தைய செட்டியார் பி. எஸ். கந்தசாமி செட்டியார் ஆகிய இக் கனவான்களின் முயற்சியும் ஊக்கமும் மிகுதியும் போற்றத்தக்கது. மற்றும் இங்குள்ள தலைவர்கள் இதில் பிரவேசித்து வேண்டிய முயற்சிகள் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

புஞ் புருகுலை [illegible] ரத்தின் பெயரா லும் சாஸ்திரத்தின் பெயராலும் போதித்து பார்ப்பனர்கள் தான் இறந் தவர்களுக்காக ஏற்பட்ட பிரதிநிதி கள் என்று கூறும் [illegible] வுட் [illegible] [illegible] திகழும் [illegible] தழுவிரர்க ளுக்கு சாஸ்திர [illegible] என்ற பட்டம் பொருத்தமானதா? எனவே மேல்நாட்டுப் பண்டிதர்களுக்கும் நம் [illegible] பண்டிதர்களுக் கும் [illegible] [illegible] [illegible] [illegible] பாகவதர்களை பாட்டிக்கதை [illegible] ளர்க்கும் மழுச் சோம்பேறி. முக்கால் சோம்பேறி. அரை சோம்பேறி என்று சொல்ல வேண்டுமேயல்லாது பண்டிதர்கள் என்றோ அல்லது அறிவாளிகள் என்றோ அல்லது ஆராய்ச்சியில் வல்ல கல்வியாளர்கள் என்றோ என்னுதற்கு பொருத்த மற்றவர்களா கவே இருக்கின்றார்கள். இவ்விதம் நம் நாட்டை அடிமை நாடாக்கியதும் நமது பார்ப்பனரல்லாத சமூகத்தைப் பாழாக்கியதும் சுபலக்ஷ்காரர்களான பண்டிதர்களும்,பாகவதர்களும்என்று கூறும் கதை சொல்லும் கூட்டத்தா ரும் அவர்களால் கையாளப்படும் புராண இதிகாச வேத சாஸ்திரதெய் வங்களாலும் தான் என்பதை ஆல் திகர்களென்ற பார்ப்பன பக்தர்கள் அறியாது பிதற்றுவது ஏன்!ஒரு சரா ரான சுயநல வெறியர்களின் சூதை வெளிப்படுத்தி சமூக விடுதலையை விரும்புங் காலத்தில் அவர்களால் கையாளப்படும் புராண இதிகாசங் களைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண் டியிருக்கிறது. புராண இதிகாசங் களை ஆராய்ச்சி செய்யுங்காலத்தில் அவற்றில் விளங்கும் மும்மூர்த்திக ளின் அறுவறுக்கத்தக்க செய்கை களைச் செல்வனே புலனுகின்றது. தெய்வத்தைப்பற்றிப் பேசும் இந்த சந்தர்ப்பத்தில் தான் மதத்தைப்பற் றிய இனிய காதம் உதிக்கின்றது. அப்பொழுது தான் நமக்கு சாஸ்திரர் கள் என்ற பட்டம் கொடுத்திருக்கின் றார்கள். அதாவது மதத்துவேஷி தெய்வத்துவேஷி என்ற பெயரை க்கொடுத்திருக்கின்றார்கள்.

இவ்விதம் இவர்களால் கூறப்படும் ஆபாசமான புராண இதிகாசங்களை யும் அவற்றில் கதாநாயகராக விளங் கும் தெய்வங்களின் இழிசெயல்களை யும் அதை ஆதரிக்கும் கோஷ்டியா ரையும் கண்டிப்பதால் ஒன்றும் முழு கிப் போய்விடாது என்பதை நான் வற்புறுத்திக்கூறுகிறேன் இந்த பண் டிதர்களால், பாகவதர்களால் கூறப் படும் விபசாரத்தைக் கைக்கொண்ட தெய்வங்களும் அந்த தெய்வங்களின் செயல்களைக்கூறும் புராண இதிகா சங்களையும் மனித சமூகத்தில்உயர்வு தாழ்வு உண்டென்று போதிக்கும் மதமும் நமக்கு இந்த காலத்தில் கண் டிப்பாய் தேவை இல்லை என்று தான் கூறுகின்றோம்.

இதற்கு மாறாக எண்ணிக்கைக்கு அடங்காத தெய்வங்களை வழிபட்டும் அந்த தெய்வங்களுக்கு பெண்ஜாதி பிள்ளைகள் உண்டென்று வீணே தர்க் கித்து கடவுளின் மீது இல்லாத ஆபாசமான கற்பனை பழிகளை சுமத்தி பார்ப்பனராகிய நாங்கள் பிரமாவின் முகத்திலிருந்து பிறந்தவர்கள் அத னால் நாங்கள் உயர்ந்தவர்கள் நீங்கள் தாழ்ந்தவர்கள் என்று உயர்வு தாழ்வு கூறி, தேசத்தையும், மதத்தையும், கடவுளையும், மக்களையும் பாழ்படுத் தும் ஒரு [illegible] சுயநல [illegible] ஆஸ்திக [illegible] சொல்லுவதாலும் எனவே பாகவதர் களும் அவர் குழுவினர்களும் பிரா மண விக்கிரக்கு அவாதி மகிமை உண் டென்று அனைகாகார பேதா பேதங் களை கற்பித்து ஒரு குப்பாரை தீண் டக்கூடாதார் [illegible] தொடக்கூடாதார் என்று ஒதுக்கி வைத்தாண்டு தமது பணப் பெட்டியையும் வயிற்றையும் நிரப்பிக்கொள்வாளுலும்யாரும்மதத் தையும் கடவுளையும் காப்பாற்றுபவர் களாகி விடமாட்டார்கள் இவர்களின் திருட்டு வஞ்சகஆஸ்திகக் கொள்கை யான ஒரு சமூகத்தை ஒதுக்கி வைக் கும் குரூர பேத புத்தியை ஒழிப்பதை விட வேறு மதமும் கடவுளும் நமக்கு இது சமயம் தேவையில்லை.

## சுயமரியாதைத் திருமணம்

தைத் திங்கள் 20-உ. திருகுடி சுயமரியாதை வீரர் உயர்திரு. அருண சலம் பிள்ளை சகோதரர் குமாரன் நிறைநாட் செல்வன் சோமசுந்திரன் அவர்களுக்கும் திருப்பத்தூர் திரு. வெட்சுமண பிள்ளை மகள் நிறைநாட் செல்வி நாகம்மாள் அவர்களுக்கும். புரோகித மொழிந்த முறையில் மண மகன் இல்லத்தில் திருமணம் வெகு சிறப்புடன் நடந்தேறியது.

தென்மாப்பட்டு, 11—2—30 | ஆறுமுத்தராமன் காரியதரிசி வைக்கம வீரர் வாசகசாலை

## பெண் தேவை.

நல்லொழுக்கமுடைய, வேளா ளர் குலத்திலுதித்த, 26 வயதுள் ள, தமிழ் நன்றாய் எழுதப்படிக்க த்தெரிந்தவரும், ஆங்கிலம் சுமா ராகத்தெரிந்தவரும், மோட்டார் டிரைவர் தொழிலில் மாதவருமா னம் ரூ. 40-முடைய ஒரு வாலி பருக்கு, நல்லொழுக்கமுடைய 22 வயதிற்கு மேற்படாத தமிழ் மட்டும் எழுதப்படிக்கத்தெரிந்த அழகுள்ள பெண் தேவை.

பெண் விதவையாயிருப்பினு ம், அல்லது கன்னிப்பெண்ணாய் இருப்பினும்,எக்குலமாய் இருப்பி னும் சம்மதமே.

எஸ். ராமசாமி,
சுயமரியாதைச்சங்கம் காரியதரிசி
துரையூர். (திருச்சி ஜில்லா)

## நோட்டீஸ்.

ஈரோடு டி. மு. கோர்ட்டு
S. C. No. 648/29.

வாதி—ஈரோடு தாலூகா பெ த்தாம்பாளையம் கிராமம் செல்லப் ப கவுண்டன் வசமிருக்கும் நம் கரு ப்ப போயன் மகன் ரங்கபோயன்.

பிரதிவாதி—சிலோன் மார்க்கம் சிலாவ் போல்டு அ. ரு ஆ. கிரா ப்பு தோட்டம் வேலை செய்யும் ஷை பெத்தாம்பாளையம் கொளந் தாக் கவுண்டன் மகன் பெரிய தம்பி என்கிற ராவுத்த கவு ண்டன்.

மேற்படி வாதிபிரவாதிபேரில் பிராம்சரி நோட்டின்படி ரூபாய் 153—8—0-க்கு செய்திருக் கும் தாவா 7-3-30ல் வாய்தா. 1930 வருஷம் மார்ச்சு மாதம் 7-ந்தேதி யன்று மேற்படி பிரதிவாதி கோ ர்ட்டில் ஆஜராகததினால் மே ற்படி தாவா ஒரு கட்சியார்தீர்மா னிக்கப்படும்.

T. M. நரசிம்மாசாரியார்,
வாதி வக்கீல், ஈரோடு.
17-2-30.

## சுயமரியாதை மகாநாடு ஈரோடு.

ஈரோட்டில் நடக்கும் 2-வது மாகாண சுயமரியாதை மகா நாட் டுக்கு இதுவரை ரூ. 3000 வசூலாகி இருக்கின்றது,

## பெண் தேவை.

தமிழும், ஆங்கிலமும் எழுதப்படிக்கத் தெரிந்தவரும், மாதம் ரூ. 40-க்கு குறையாத வ ருமானமுள்ள சுமார் 30 வயது உள்ள வாலிபருக்குஎந்த ஜாதியி லாயினும் பெண் தேவை. சுயமரி யாதைக்கொள்கைப்படி விவாகம் செய்துகொள்ள சம்மதம். விருப் பமுள்ளவர்கள் கீழ் கண்ட வின தது விலாசத்திற்கு எழுதவும்.

ஈ. ரா. வெங்கிட்டராமன்,
கெடியார சிபேர்,
காவேரி மேட்டூர் பிராஜக்ட்.

# மதுரை முனிசிப்பாலிட்டி

# டெண்டர் விளம்பரம்

1930—31-ம் வருடத்தில் இந்த முனிசிப்பாலிட்டியின் உபயோ கத்துக்காக நிலக்கரி சப்ளை செய்வதற்கு முத்திரை வைத்த டெண்டர்கள் தேவை. மிகவும் உயர்ந்த நிலக்கரியாக இருக்கவேண்டும். அலிப்பூர் கவர்ன்மெண்ட் டெஸ்ட் ஹவுசிலிருந்து சமீபத்தில் கிடைத்த ரசாயன ஆராய்ச்சி சர்ட்டிபிக்கட் டெண்டருடன அனுப்பவேண்டும். நிலக்கரி தூசி யில்லாதாக துப்புரவு செய்யப்பட்டு ரயில்வே வெய்பிரிட்ஜிலிருந்து சுமார் 3 மைல் தூரத்திலுள்ள கோச்சடையிலும், ஒரு மைல் தூரத்தின்ள ஆரப்பா ளையத்திலுள்ள இரண்டு வாட்டர் வொர்க்ஸ் பம்பிங் ஸ்டேஷன்களிலும் கொண்டுபோய் டெலிவரி செய்யப்படவேண்டும்.

வருடம் முழுவதுக்கும் கோச்சடை ஸ்டேஷனுக்கு ஏறக்குறைய 700 டன் நிலக்கரியும் ஆரப்பாளையத்திலுள்ள ஸ்டேஷனுக்கு 400 டன் நிலக்கரியும் வேண்டியதாயிருக்கும்.

டெண்டர்களில், "1930—31-ம் வருடத்துக்கு நிலக்கரி சப்ளைக் கான டெண்டர்கள்" என்று மேற் குறிப்பு எழுதி ரூ. 100 கட்டணத் தொகையுடன்25-2-30 மாலை 5-மணிக்கு முன்கிடைக்கும்படிகீழ்கையொ ப்பமிட்டவருக்குஅனுப்பவேண்டும். முனிசிப்பாலிட்டியிலிருந்து எந்த டெண்டர்தாரருக்காவது பணம்சேரவேண்டியதாயிருந்தால், கட்டணத்தொ கையாக வைத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. ஒப்புக் கொள்ளப்பட்ட டெண்டர்தார் டெண்டர் ஒப்புக்கொள்ளப்பட்ட பதினறு தினங்களுக்குள் மேற்கொண்டு ரூ. 300 கட்டணத்தொகையாகச் செலுத்தி தமது சொந்த செலவில் இந்த ஆபீசிலிருந்து கொடுக்கப்படுகிற டிராப்ட் படி ஒரு கான்ட்ராக்ட் ஒப்பந்தம் எழுதிக்கொடுக்க வேண்டும். அந்த ஒப்பந் தப்படி செய்யத் தவறினல் கட்டணத் தொகை பரி முதல் செய்யப்படுவது டன் கான்ட்ராக்ட்டும் ரத்துச் செய்யப்படும்.

எந்த டெண்டரையாவது அல்லது எல்லா டெண்டர்களையுமாவது காரணம் சொல்லாமலே தள்ளுபடி செய்ய கவுன்சிலுக்கு உரிமையுண்டு. ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரின் கட்டணத் தொகை டை சப்ளைக் காக பணம் கொடுக்கப்பட்டதற்குள்ள ரசீதுகளை ஆடிட்டர் பரிசீலனை செய்த பிறகு தான் திரும்பக் கொடுக்கப்படும்.

(ஒப்பம்) ஆர். எஸ். நாயுடு,
முனிசிபல் சேர்மன்.

முனிசிபல் ஆபீஸ், மதுரை 27-1-30

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சாய்ந்து சக்கல் சக்கலாக உடைந்து போய் விடுமே. திருஞான சம்பந்தருடைய சரித்திரத்தில் இல்லாத சமணர்கள் கதையை எந்த "ஈனப்பேய்களும்" சொல்ல வில்லையே சமணர்களின் கதைகளினுல் தானே திருஞானசம்பந்தரின் பெருமை காட்டப் பட்டிருக்கிறது. அது எந்தப்பேய்களுக்கு? பெரிய புராணத்தில் சொல்லியிருப்பதைவிட திருவிளையாடல் புராணத்தில் சமணர்களை கழுவில் போட்டமாதிரி படமும் சைவச சின்னங்களணிந்தவர்கள் சமணர்கள் கழுவில் துள்ளி ஓடிப்போகாமல் அழுத்திப் பிடித்துக்கொண்டிருப்பதுமான படமும் போட்டு அந்த புஸ்தகத்தைபற்றி கோவில், மடம், பணக்கார வீடு முதலிய இடங்களில் சைவப்பண்டிதர்களால் பிரசங்கமும் செய்யப்பட்டு தமிழ்நாடெல்லாம் பரப்பப்பட்டிருக்கிறது. இது எந்த ஈனப்பேய்கள் செய்த காரியம் அதுவுமல்லாமல் மதுரைமீனுட்சியம்மன் கோவில் உள்ப்பிரகாரம் தெப்பக் குள மண்டபத்தைச சுற்றியும் சிவபெருமானின் திருவிளையாட்டைப்பற்றி எழுதியிருக்கும் சித்திரங்களில் சமணர்களைக் கழுவில் போடும் மாதிரியும் அங்கே திருஞானசம்பந்தர் பல்லக்கிலிருந்து கொண்டு விபூதி அணிந்து தலை, கை, கழுத்து முதலியவைகளில் உருத்திராட்சமணிந்து அவர் சிஷ்யர்கள் சமணர்களைக் கழுவில் போட்டு கழுமரத் தாணி ஆசனத் துவாரத்திலிருந்து உச்சந்தலைவரையிலும் குதி தவராமல் ஏறுவதற்குத் தலையையும் தோளையும் அமுக்குவதையும் ஓடும் சமணர்களை சைவர்கள் பிடித்துக் கழுமரத்தில் போடக் கொண்டுவருவதையும் சில சமணர்களை கழுவில் போட சைவர்கள் பிடித்துக்கொண்டு நிற்பதையும் சமணர்கள் பயந்து சாம்பலையும் சாணியையும் பூசிக் கொள்ளுவதையும் இது பூசின நெற்றியோடு பூசாத நெற்றியைச் சமணர்கள் தேய்த்துக்கொள்ளுவதையும் இதைக் கண்டு சமணர்களை சைவர்கள் விட்டுவிடுவதையும் இன்றும் பார்க்கலாமே. இவை எந்த ஈனப் பேய்களால் செய்யப் பட்டவைகள். அந்தச் சித்திரங்கள் எழுதப்பட்டுப் பல நாளாய்விட்டபடியால் மங்கி விட்டது. அதில் சில பாகம் புதிப்பித்திருக்கிறார்கள். பழைய சித்திரத்தில் சமணர்களை கழுமரத்தில் ஏற்றி அழுத்திக் கொண்டிருப்பது சைவச் சின்னமணிந்தவர்கள் புதிப்பிக்கப்பட்டதில் சமணர்களைச் கழுவில் ஏற்றி அமுக்குவது சேவகர்களாக மாற்றி இருப்பதை பார்க்கலாம். இது எந்த "ஈனப் பேய்" களுக்குப் பயந்துகொண்டு செய்யவேண்டி வந்தது. இப்படிமாற்றப்பட்டிருக்கிறது. இன்னும்சிறிதுநாள்சென்றால் "ஈனப் பேய்கள்" எல்லாவற்றையும் சீரடையச் செய்துவிடும்.

சமயத்தின் பேரால் தாம் பிறமனிதர்களை யதேஷ்டமாகக் கொன்று முடித்ததுபற்றி ஆலயங்களில் விசேடம் கொண்டாடுகிறார்கள். "டக்;' ஜாதிகள் தமது கொள்கைகளை நிறைவேற்றியது தாம் வணங்கிய தேவியின் கிருபை என்பதை மறந்துவிட்டார்கள். டக் ஜாதியர் விஷயத்தில் அவர்களுடைய தேவதையை வெளிப்படையாகவே சம்ஹார மூர்த்தியென்று வணங்குகிறார்கள். சைவத்திலும் சம்மார மூர்த்தியுண்டு. அந்த மூர்த்திக்கு கோவிலுக்குள் தாழ்ந்த ஜாதிக்காரர்கள் என்று பேர் வைக்கப்பட்டவர்கள் வரப் படாதென்று சொல்லித் தடுக்கமட்டுந்தான் இப்பொழுது அதிகாரமிருக்கிறது. மற்ற அதிகாரங்களெல்லாம் வெள்ளைக்கார அரசாங்கத்தில் வீழ்த்தப்பட்டிருக்கிறது. மேற்படி குற்றவாளி ஜாதியின் கொலையுணர்ச்சியை தெய்வமாக்கினது தனி மனிதனுடைய மனமன்று. கூட்டத்தின் பொது உள்ளம் ஆதலால் தெய்வீகமென்று கருதப் பட்டது. அதே மாதிரி ஜாதியான பொது மனமென்ற கூட்டு நிலையில் ஸ்வார்த்தமும் அற்பச் செருக்கும் விரோதமும் தெய்வ பூசையுடன் கூசாமல் வந்து கலந்துகொண்டிருக்கின்றன. அதுபோலவே சைவக் கோவில்களில் சமணர்களைக்கழுவேற்றின விசேடத்திற்குத் திருநாள் கொண்டாடுகிறார்கள். இதை இசைத்ததும் இந்த உண்மையை உபந்நியாசம் செய்வதும் புலால் மணம் மாராத ஈனப் பேயர்களல்லவே. வலியவனைக் கண்டால் சமயக் கொள்கைகளை மறைத்து மெலிந்தவர்களைக் கண்டால் சமயக் கொள்கை என்று கொடுமை செய்யும் குரூரப் பேய்கள்தானே அதைக் கொண்டுவந்து சேர்த்தினதும் இன்றும் நாளையும் உபந்நியாசம் செய்வதும் சமணர்களைக் கழுவேற்றினதாக திருஞான சமபந்தர் கதையிருக்க அக் கதையால் அவர் பெருமை விளங்க அதன் வைபவம் சைவப் புராணங்களில் கூத்தாட பிரசித்தித்துப் பரிசு பெற கடவுள் பேரில் பாட்டிருக்க அதைப் பக்தர்கள் கண்ணீர் சொரிய பாடிப் பக்திகாட்டகோவில்களில் வருஷா வருஷம் அதன் திருநாள் சிறப்பாக நடக்க சமணர்களை சிவபெருமான் தெண்டித்த சிறப்பைக் கொண்டாடும் சைவர்களுமிருக்க இத்தனை பிரத்திபட்ச ருஜுக்கள் இருந்தும் அதைச் சொன்னவர்களை எடுத்துக் காட்டியவர் புலால் மணம் வீசும் ஈனப்பேய்களென்று சொல்லிவிட்டால் பொது ஜனங்கள்நம்பிஏமாந்து விடுவார்களா? அல்லது எடுத்து காட்டியவர்களாவது "ஈனப்பேய்களாகிவிடுவார்களா?

ஒரு சமயத்தவர்தானே உயர்வென்ற அசாதாரண கர்வ சிந்தையில் புகுந்து தங்கள் தெய்வப் பெருமையையும் அருளையும் காட்டி சரித்திரங்களில் பொய்களைச் சிருஷ்டித்து தோற்ற ஜாதியார்களை இடைவிடாமல் பழித்து அவர்கள் அவமானத்தை எக்காலமும் மறந்து போகாமல் பாராட்டுவதறகு புராணங்களும் சித்திரக் காட்சிகளும் தெய்வப் பாடல்களும் கோவில்களில் திருநாள்களும் செய்தால் அது அன்பும் ஜீவகாருண்யமும் உடையதென்று சொல்லிக் கொண்டிருக்கும் சைவ சமயத்திற்குப் பெருமையாகுமா?

"பரத்தையரைப் புணரும் பாமர மாக்களே எங்கள் பரவை மணாளனைக் குறை கூறும்". என்பதற்குப் பதிலைக் கவனிப்போம். "தருமகட்பேசினேன் வீயவே நூல் போன சங்கிலி பாற் புகு மணக் காதலினு பொற்றியூருறை புண்ணியன்றன்" என்ற பாட்டைப் பற்றி நூல் போன சங்கிலியா [அதாவது விதவையா] அல்லது நூல் போகாத சங்கிலியா என்கின்ற தர்க்கம்சைவப்பண்டிதர்களுடையது. சுந்தரமூர்த்திகள்ஒரு பெண்ணைச்சத்தியம் செய்து கலியாணம் பண்ணிக் கொண்டு அந்தப் பெண்ணிருக்க மறு பெண்ணை விவாகம் செய்து கொள்ள மறுபெண்ணிடம் முன் விவாகமில்லை என்று பொய்ச் சத்தியம் செய்து கொடுக்கத் தனக்குச சிவபெருமானையும் துணை கொண்டுக் கலியாணம் முடித்துக் கொண்டதாக அவர் சரித்திரம் சொல்லுகிறது. பொய்ச் சத்தியம் செய்தவர்களையும் அதற்கு உடந்தையாக விருந்தவர்களையும் குறை கூற "பரத்தையரைப் புணர்ந்தும்" "பாமர மக்களாகயிருக்க"வும் வேண்டுமென்பதுண்டோ? ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டவன் அப்பெண்ணிற்குத் தெரியாமல் வேறு பெண்ணை மணக்கையில் இந்தப் பெண்ணுக்கும் முன் பெண் இருப்பதைத் தெரியாமல் மறைப்பதற்கு சத்தியமும் செய்து விவாகம் செய்து கொண்டால் அதைத் தெரிந்த இரு கூட்டத்துப் பந்துக்களும் பெண்களும் அந்த மாப்பிள்ளையைக் குறைகூற பரத்தையரைப்புணர்ந்தும் பாமரமாக்களாகவுந் தானிருக்க வேண்டுமென்றுத் தூத்துக்குடி சைவத்தலைவர் தீர்மானம் பண்ணினுல் உலகமொத்துக் கொள்ளுமா? ஒரு பெண்ணைச் சத்தியம் செய்து மணந்து அதை மறைத்து மறு பெண்ணிற்கு அதைத் தெரியப்படுத்தாமல் மறு பெண்ணையும் ஏமாற்றி விவாகம் செய்து கொள்ளுகிறவர்களை உலகம் என்னதான் சொல்லுகிறது? பிள்ளை பெறாதவள், பெண்குழந்தையே பெறுகிறவள். சாவுப் பிள்ளை பெறுகிறவள்ஆகியஇவர்களை 12, 10, 8, வருடங்களில் தள்ளி விட்டுமறு பெண்ணை விவாகம் செய்து கொள்ளச் சொல்லும் ஸ்மிருதி விதிப்பிரகாரமும் இவருடைய சரித்திர சம்பவமுமில்லையே. சுந்தரமூர்த்திகளையும் அவருக்கு உடந்தையாகவிருந்த திருவாரூர் தெய்வத்தையும் வெட்டிவிடக் காத்துக் கொண்டிருந்த விறன்மிண்ட நாயனர் பரத்தையரைப் புணர்ந்தவரென்று சொல்ல எந்தச் சைவச் சபை தலைவராலும் முடியாது. பாமரரென்று சொல்லவுமாகாதே.

"எங்கள் மணிவாசகனருளிய திருவாசகம் ஒரு வாசகத்திற்கு முருகாத மனப்பாறைகட்கேறுமோ" யென்பதற்கு பதிலைக் கவனிப்போம். மணிவாசகரருளிய திருவாசகம் ஒரு வாசகத்திற்குமுருகாமலே யிருக்கட்டும் எல்லா வாசகத்திற்கும் உருகும்படியான பஞ்சைப போன்றமனமுடைய வக்கீலான சைவ சபைத் தலைவருக்கு மணி வாசகம் ஏறியிருந்தால் கட்சிக்காரன் ஸ்டாம்புப்பணத்தில் கோவில் கட்டிவிட்டுவக்கீல்சன்னதையுமிளக்க வேண்டு வந்திருக்கும் ஆனதால் அவருக்கும் ஏற வேண்டாம். இதை இவ்வளவோடு நிறுத்தி சமயம் ஏற்பட்டால் விரித்தெழுதுகிறேன்.

பழநி சி. எம். சாமி,

# குரு தாம்பிர பஸ்பம்

இது அபூர்வ சக்தி வாய்ந்தது. திமிர், குஷ்டம், மதமதப்பு குறைநோய், வீக்கம், பெருவயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம்! சொரிகள், பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆராத குழிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

50 வேளை பஸ்பம் ரூபா 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அன்னிய நாட்டார் ரூ. 5 முன் பணம் அனுப்ப வேண்டும்.

சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்திய சாலை, பழநி.

உயர்வும் உத்திரவாதமுமுள்ளது!

உலகப் பிரசித்தி பெற்ற

## மாயவரம் R.S. கிருஷ்ணா அண்டுகோ.

ஸத்குரு சிங்கச் சந்தனாதித் தைலம் பிருங்காமலகத் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்.

முதலியவைகளே! உங்கள் கண்ணுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைத் தந்து திரேக ஆரோக்கியத்திற்கு குணம் தரத்தக்கது.

இவைகளைப் பல வருஷங்கள் அநுபவமுடைய தேர்ந்த நிபுணர்களால் உயர்ந்த பச்சிலை மூலிகைகளைக் கொண்டு ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இவைகளை ஸ்நானம் செய்து வருவதால் சிரசைப்பற்றிய நோய்களைப் போக்கி திரேகத்திற்கு குளிர்ச்சியையும், நறுமணம்புகம்பும் சுகந்த பரிமள வாசனையையும் கொடுக்கத்தக்கது.

அநேக பெரிய மனிதர்களாலும், டாக்டர்களாலும், பத்திரிகாசிரியர்களாலும், தேசிய மாபெரும் தலைவர்களாலும் உபயோகித்துச்பார்சு செய்யப்பட்டவை.

ஒரே முறை பரீட்சியுங்கள், பரிட்சைக்கு உத்திரவாதமுள்ளது.

மலாய் நாட்டில் கிடைக்குமிடம்:—
பி. கோவிந்தசாமி பிள்ளை,
48-50, சிரங்கன் ரோடு,
சிங்கப்பூர்.

ஆர். சந்தானகிருஷ்ணன்
ஷாப் அண்டு சந்தனக்கடை,
மாயவரம்.

## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

### சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

| | |
|---|---|
| அநுமதிக்கப்பட்ட மூலதனம் | ...ரூ. 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. 3,56,05,275, |
| வசூலான ,, | ... ரூ. 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:

"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

## குடி அரசு புத்தகாலயம்.

| | |
|---|---|
| மேயோ கூற்று மெய்யா பொய்யா | 0—4—0 |
| ஞானசூரியன் (அச்சில்) | |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| மனு நீதி மருமம் ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. ... | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. ... | 0—2—0 |

8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

நிமிஷ நேரத்தில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சோதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம்; மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கப்த்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.
புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

## அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்.

இன்ஸ்டிடியூட் நாசரேத் S. I. R.
ஸ்தாபன வருஷம் 1920.

இளமையிற் படிக்கவில்லையென்று வருந்தவேண்டாம்.

தமிழ்வாசிக்க, எழுதத்தெரிந்த 100-பேர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிகுலேஷன் கோர்ஸுக்கு தபால் மூலம் படிக்க எடுக்கப்படுகிறார்கள். அவர்கள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்து காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தரப்பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூர்களில் வாசிக்கலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்தியார்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. தற்சமயஞ் செய்யும் தொழிலுக்கும் உத்தியோகத்திற்கும் யாதொரு இடையூறின்றி வாசிக்கலாம். தினசரி மாணவர்கள் சேர்ந்தவண்ணமிருக்கிறார்கள். உடனே பிராஸ்பெக்டசுக்கு ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

# ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகையான மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:- தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச் செய்யும். காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கணவலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர்வடிதல், ஓயாத தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, துர்க்கந்தமடித்தல் முதலிய வியாதிகள் நீங்கி தேகத்திற்குச் சுகம் உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

| | |
|---|---|
| பெரிய டின் ரூ. 1—12—0 | தபால் சார்ஜ் வேறு. |
| சிறிய டின் ரூ. 1— 0—0 | |

# பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூ. 1—0—0, தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ தமிழிலோ எழுதவேண்டும். சோல்ஏஜண்டுகள் தேவை. விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
(14) திருநெல்வேலி ஜில்லா, [தென்னிந்தியா.]



# பொம்பாய் ஜரிகை சேலைகள்.


எங்களிடம் 10, 12, 14, 16; 18 முழங்களில் பலவிதமான ஜரிகை வேலை செய்த புது மாதிரியான பியான்ஸி வாயில் சேலைகளும் அசல் சில்க் சேலைகளும், வெல்வெட்டின்பேரிலும், சில்க்பேரிலும் ஜரிகை வேலை செய்த, ரவிக்கைகளும், ஜாகிட்களும், பிராக்குகளும், குறைவு விலை முதல் ஜாஸ்தி விலை வரையிலும் கிடைக்கும். மொத்தமாயும் சில்லரையிலும், வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பப்படும். வேண்டியதற்கு உடனே எழுதுங்கள். கடிதங்கள் தமிழிலும் எழுதலாம்.

*B. K. BALASUNDARAM NAIDOO & Co,*
Gopalpuvan Princes Street,
"Tel Address"—Mahavishnu BOMBAY. 2



இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்
விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
வெளிநாட்டு ஆர்டர்களுக்கு
முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மென்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஓர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை



முதல் முதலில் வரும் ஆடர்காரர்களுக்கு
ரிஸ்டு வாச்சு இனாமளிக்கப்படும்.

இனாம்! இனாம்!!

# 101 ரூபாய் இனாம்.

யாருக்கு

எமது தாயத்தை பொய் என்பதாக ருஜு படுத்துபவருக்கு.

1. நினைத்த காரியம் ஜெயம். 2. பரீட்சையில் தேறச்செய்யும். 3. தனலாபம் லட்சுமி கடாட்சம். 4. வியாபாரத்தில் அதிக லாபம். 5. பந்தயங்களில் வெற்றி. 6. ஸ்திரீ புருஷர்களை வசியமாக்கும். 7. துஷ்ட கனவுகள், கர்ம வியாதிகள் எல்லாம் ஓடி ஒழிந்து விடும். 8. வழக்குகளை, கேசுகளை ஜெயிக்கும். 9. துஷ்ட தேவதைகளின் பயங்கரம் ஒழியும். 10. ஏவல் சூன்யாதி எருது. 11. பேய் பிசாசுகள் முதலிய சேஷ்டைகளும் தேகாதியந்தவலியும்நீங்கும்.

முதல் முதலில் எங்களுக்கு வரும் 3 தாயத்து ஆடர்காரர்களுக்கு பெயர் வழங்குவதற்காக ரிஸ்டு வாச் இனாமாக தாயத்துடன் அனுப்புவோம். பின்னிட்டு மேற்படி யாரின் பெயரும் ஊரும் அச்சிடுவோம். பிந்தினால் இப்பேர்ப்பட்ட சமயம் கிடைப்பதரிது. தாமதப்படுத்தினால் தவறிப்போவீர்கள்.

| | | |
|---|---|---|
| தாயத்து 1-க்கு ரூ. | 2—8—0 | தபால் செலவு 0—6—0, |
| ,, 3-க்கு ரூ, | 6—0—0 | |

F. M. ... முன்பணம் ரூ. 2 அனுப்ப வேண்டும்.

விலாசம்:— வசீகரம் ஆசிரமம்
6. ரகுனந்தன் லேன் கல்கத்தா (Calcutta)



# தமிழரசு.

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனாம்.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு ரூ. | 4—0—0 |

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.
உபாத்திராதிபர்:—நாராயணம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலையம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.


கடவுள் கடவுளென காசைத்

தொலைக்காதே

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.